திராவிடநாடு

5-3-61 | வார வெளியீடு | விலை 16 காசு

# படை திரட்டு!

—[அ. மனப்போக்கன்]—

—[●]—

வாழ்ந்தகதை தனைத்தினமும் பேசிப் பேசி
வாய்நொந்து போனதே! இன்று நாட்டின்
தாழ்ந்தகதை நினைப்பதற்கும்; உலகை யாண்ட
தமிழர்களும் கன்னித்தமிழும் வடவர் தாளில்
வீழ்ந்தகதை எண்ணுதற்கும்; இமய நெற்றி
மீதினிலே போட்டிட்டோர் துன்பச் சேற்றில்
ஆழ்ந்தகதை மாற்றுதற்கும் எழுச்சி யின்றி
அழிகின்ருய்; விடுதலைக்குப் படைதி ரட்டு!

சலித்தகதை ஆனதே முன்னேர் செய்த
சரித்திரத்துப் பெருமைகளைப் பேசிப் பேசி!
மலிந்தகதை ஆனதே தமிழர் நாடு
வருகின்ற இனமெல்லாம் வாழ்வ தற்கு;
நலிந்தகதை ஆனதே தமிழர் வாழ்வு
நாடுவிட்டு நாடுசென்று வாடு கின்ருர்;
குலைந்தகதை மாற்றுதற்குப் படைதி ரட்டு!
குவலயமும் பணிந்துவிழும் தமிழர் தாளில்!

# அவர் நடந்த பாதை....!

சென்ற இதழ் தொடர்ச்சி...

**காட்சி 2**

இடம்:- ஒரு வீதி.

உரியோர்:- தொழிலாளி, மற்றொருவர், சாக்ரடீஸ், லைக்கோன், மெலிடஸ், அனிடஸ் மற்றும் பலர்.

*[தெருத் திண்ணையிலே ஒரு தொழிலாளி தன் குழந்தையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும்போது, மற்றொரு நண்பர் வருகிறார். குழந்தைக்கு அவரைக் காண்பித்து]*

தொழி:- அதோ பாருடா கண்ணு! மாமா வர்றாரு. மாமாவை எந்தக் காலிலே உதைக்கிறது? காண்பி பார்க்கலாம். மாமா பொண்ணு கொடுக்கிறாரா கேளுடா!

மற்றொ:- ஊ ஹூம்! என்னை உதைக்கமாட்டானே! உன்னைத் தான் அடிப்பான். உங்கப்பாவை எந்தக்கையால் அடிக்கிறது! அடி பார்க்கலாம். (குழந்தை அடிக்கிறான்) பார்த்தியா! பார்த்தியா! அடிச்சுப்புட்டான்.

தொழி:- அட போக்கிரிப் பயலே! ஏது இப்போதே மாமனார் பேச்சைக் கேட்க ஆரம்பிச்சுட்டியே! (பையன் வேறொரு இடம் செல்லக் கையைக்காண்பிக்கிறான்) எங்கே? அங்கேயா! அங்கே போகக்கூடாதுடா! அங்கே பூதம் இருக்குது. அது புடிச்சுக்கொள்ளும்.

குழந்தை:- அப்பா...! அப்பா......! (என்று பக்கத்திலுள்ள ஒன்றைத் தொடப்போகிறான்)

தொழி:- அதுவா! அதைத் தொடக் கூடாதுடா! அது புடிச்சுக்கும்! அதோ இருக்கு பாருடா! அது தான் நம்ம சாமி; கும்புடு பார்க்கலாம்.

*[இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு நின்றிருந்த சாக்ரடீஸைப் பார்த்து]*

மற்ற:- என்னய்யா இப்படி நின்று கொண்டு சதா இங்கே பார்த்துக் கிட்டு இருக்கிறீங்க!

சாக்ர:- ஒன்றுமில்லை! அக்குழந்தை அவருடைய குழந்தைதானே!

தொழி:- ஆமா! ஐயா! என் குழந்தை தாங்க!

சாக்ர:- மிகவும் அழகும், ஆற்றல் மிக்கவனுமாகத்தான் இருக்கிறான். ஆனால், அறிவும் சிந்தனைத் தெளிவும் அற்றவரிடம் வளருகிறான்.

தொழி:- என்னய்யா சொல்றீங்க?

சாக்ர:- பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. கள்ளம், கபடமற்ற பிள்ளைப் பருவத்திலேயே அவனை நல்லவனாகவும்,

**சி. பெரியண்ணன்**

வல்லவனாகவும், துல்லிய சிந்தனை மிக்கவனாகவும் வளர்த்துவிட வேண்டும். அப்படி வளர்த்தால் தான் அவனுக்கும், வருங்காலசமுதாயத்திற்கும் நன்மை ஏற்படும்.

மற்ற:- இப்போ நாங்க என்னய்யா செய்துவிட்டோம், நீங்கபாட்டுக்கு என்னென்னமோ சொல்லிக் கிட்டே போறீங்க!

சாக்ர:- குழந்தைகளை வளர்ப்பதற்குக்கூட நம் மக்களுக்குச் சிந்தனைத் தெளிவு வேண்டும் என்கிறேன். வளர்ப்புமுறைகளையும் மக்கள் கற்றுக்கொள்ளவேண்டும்.

மற்ற:- அடடே! கேளுங்கடா கூத்தை! குழந்தைங்களை வளர்க்கிறத்துக்குக்கூடக் கத்துக்கிடணுமாம். ஓ! ஐயா! அம்மா! போறவங்க வர்றவங்க எல்லாரும் வாங்க! வாங்க!! ஐயா! கொழந்தைங்களை வளர்க்கிறத்துக்கு கத்துதரப்போறாராம்...... டுடும்... டுடும்...டுடும்...!

*[என்று சிரிக்கிறான். போவோர் வருவோரெல்லாம் வந்து சூழ்ந்து கொண்டனர். அனிடஸ் வந்து]*

அனி:- டேய்! என்னடா இங்கே ஒரே கூட்டம்?

மற்ற:- ஓ! நம்ம கவிஞரய்யாவா! வாங்க சாமி! வாங்க! இவரு குழந்தை வளர்ப்பைப்பற்றிச் சொல்லப்போறாராம்.

அனி:- அப்படியா! வளர்ப்பது எப்படியோ இந்தச் செப்படிவித்தைக் காரர் செப்புவாரா?

மற்ற:- ஏய்யா நிக்கிறே! சொல்லய்யா கேக்கிறாரே, தெரிஞ்சாத் தானே சொல்லப்போறே!

சாக்ர:- நான் தெரியாதவன்தான், நீங்கள் தெரிந்துவைத்திருப்பவைகளைக் கொஞ்சம் எனக்குச் சொல்லுவீரா?

அனி:- என்னைக் கேளு, சொல்லுகிறேன்.

சாக்ர:- எவைகளைப்பற்றி...?

லைக்:- உன் கதையைப்பற்றி! இப்போதுதானே குழந்தை வளர்ப்பைப்பற்றி உளறித்தொலைத்தாய்; அதைப்பற்றிக் கேள்!

( 4-ம் பக்கம் பார்க்க )

# கேலிக் கூத்து!

லர் 19 ] ஆண்டு சந்தா ரூ. 8 (5—3—61) தனிப்பிரதி 16 காசு [ இதழ் 32


ஆளும் கட்சியான காங்கிரசுக்குள் அன்றாட நிகழ்ச்சியாக நடைபெற்று வரும் பிளவுகளும், பூசல்களும், பதவிவேட்டைகளும் வேறு எந்த எதிர்கட்சிகளிலும் நடைபெறுவதில்லை என்பதை நாம் பலதடவை எடுத்துக்காட்டியிருக்கிறோம். இது மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காகவும், அவர்களிடையே ஒற்றுமையை உண்டாக்கிக் காட்டுவதற்காகவும் காங்கிரஸ்காரர்கள்—அதிலும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் காங்கிரஸ்காரர்கள் பொதுமக்களின் பணத்தை எவ்வளவு தாராளமாக எடுத்துச் செலவு செய்கிறார்கள் என்பதையும் அவ்வப்போது எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம்.

ஆனால், அவர்கள் எதிர்க்கட்சியினராகிய நாமோ அல்லது மற்றவர்களோ எடுத்துக்காட்டும் நியாயமான காரணங்களை ஒப்புக்கொள்வதில்லை. அப்படி ஒப்புக்கொண்டு தங்கள் தவறுகளைத் திருத்திக்கொள்வது, ஆளுங்கட்சியினராகிய தங்களுக்கு இழுக்கென்ற முறையில் நடந்துகொள்கின்றனர்.

இந்த முறை, ஜனநாயகவாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் நிலையில் இருப்பவர்களுக்கு ஏற்றதல்ல என்பதை அவர்கள் உணர்வதில்லை.

காங்கிரஸ் கட்சியினர் செய்யும் தவறுகளை எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, காங்கிரஸ் காரர்களிலே கூடச் சிலர் அவ்வப்போது எடுத்துக்காட்டி இடித்துக்கூறி வருகின்றனர்; என்றாலும், அவர்கள் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள ஒப்புவதில்லை. இதற்கெல்லாம் காரணம், ஆளும் பொறுப்பு அவர்களிடம் இருப்பதேயாகும். ஆளுவோரை அதட்ட இவர்கள்யார் என்பதினாலோ என்னவோ, யார் எந்த நல்ல யோசனைகளை எடுத்துச் சொன்னாலும் ஏற்பதில்லை.

அண்மையில் மைசூரில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எடுத்துகாட்டி 22—2—61–ல் 'சுதேசமித்திரன்' ஏடு ஒரு தலையங்கத்தைப் **"பொதுப் பணம் சூறை"** என்ற தலைப்பிட்டு எழுதியிருக்கிறது. அதன் ஒரு பகுதியை இங்கு தந்துள்ளோம்.

"பல ராஜ்யங்களில் காங்கிரஸ் கட்சிக்குள் காணும் பிளவுகளுக்கு முக்கியமாகப் பதவி வேட்டையே காரணம் என்பது பகிரங்க ரகசியம். இதில் இனி ரகசியம் என்ற பேச்சுக்கே இடமில்லாதபடி, மைசூர் சட்டசபை காங்கிரஸ் கட்சியினர் உண்மையை அம்பலமாக்கிவிட்டனர். இதுவரை அங்கு மந்திரி சபை பல முறை மாறியிருக்கிறது. தற்போதுள்ள ஜட்டி மந்திரி சபைக்கும், அது ஏற்பட்டது முதலே தலைவலிதான். காங்கிரஸில் அவருக்கெதிராயுள்ள கோஷ்டி அவரைக் கிளப்ப, சென்ற பல மாதங்களாக முயன்று வந்திருக்கிறது. இறுதியாக இப்போது இரு தரப்பினரிடையும் ஒரு உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. இதையொட்டிக் காங்கிரஸின் பிரதேசத் தேர்தல் கமிட்டி விஸ்தரிக்கப்படுவது பற்றி நமக்கு கவலையில்லை. அதில் மேற்கொண்டு எவ்வளவு பேரைச் சேர்த்துக்கொண்டாலும், அது காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பொறுத்த விஷயம்; அதனால் பொது ஜனங்களுக்கு எவ்விதத்திலும் நஷ்டமில்லை.

மேற்குறித்த உடன்பாட்டின் மற்றொரு ஷரத்துப்படி, இப்போது மந்திரிசபையும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஜட்டி மந்திரிசபையைக் கிளப்ப முயன்ற கோஷ்டியைச் சேர்ந்த நால்வர் புதிய மந்திரிகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஏற்கெனவே மைசூர் மந்திரி சபையில் பத்து மந்திரிகளும், ஆறு உதவி மந்திரிகளும் இருந்து வருகிறார்கள். மேற்கொண்டு நான்கு மந்திரிகளை நியமிக்க என்ன அவசியம்? மந்திரி சபையின் வேலை திடீரென்று பெருகிவிட்டதாகச் சொல்ல இடமில்லை. காங்கிரஸுக்குள் இருக்கும் பூசலைத் தீர்ப்பதைத் தவிர, வேறெதுவும் மந்திரி சபை விஸ்தரிப்பின் நோக்கமாகச் சொல்லமுடியாது. இவ்வாறு ஒரு கட்சிக்குள் சமரசம் ஏற்படுத்துவதற்காகப் பொதுமக்களின் பணத்தைச் சூறையாடுவது யோக்கியமா என்ற கேள்விக்கு மைசூர் காங்கிரஸ் தலைவர்கள் என்ன பதில் சொல்லமுடியும்? மக்கள் சிக்கனமாக வாழ உபதேசிப்பதில் இத்தகைய தலைவர்களைப்போல் முன்னணியில் இருப்பவர்கள் யாருமில்லை. தங்கள் விஷயத்தில், அதுவும், பொதுப்பணத்தைச் செலவு

செய்வதில் அந்த உபதேசம் பொருந்தாதென அவர்கள் எண்ணுகின்றனரா? இதுவரை எவ்வளவோ சட்டசபைகளில் வெவ்வேறு காரணங்களை முன்னிட்டு எதிர்க்கட்சியினரின் வெளிநடப்புகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இவற்றில் எதுவும் மைசூர் சட்டசபை எதிர்க்கட்சிகள் தற்போதைய மந்திரிசபை விஸ்தரிப்பைக் கண்டிப்பதற்காக நடத்திய வெளிநடப்பைப்போல் இவ்வளவு உருவான ஆதாரத்துடன் கூடியதல்ல.''

இவை எல்லாம் எதனைக்காட்டுகின்றன? ஆளுங் கட்சியினர் தங்கள் கட்சிக்கு ஒரு ஊனம் ஏற்படுகிறதென்றால், எவ்வளவு தைரியத்துடன், துளியும் கூச்சமின்றிப் பொதுப்பணத்தை அள்ளி இறைத்துத் தங்கள் கட்சியில் ஏற்படும் பிளவுகளையும், பிணக்குகளையும் தீர்க்க முற்படுகின்றனர் என்பதைப் பொதுமக்கள் அறியவேண்டுமென்பதற்காகவே இதனை எழுதுகிறோம்.

இந்த இரங்கத்தக்க—கேவலமான முறைகளைக் கையாண்டேனும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் காங்கிரஸ் கட்சியினர்தான் எதிர்க்கட்சிகளில் ஏதேனும் ஒரு சிறு சலசலப்பு ஏற்பட்டாலும் அதைப் பெரிதாக்கிக் காட்டி அதன் வாயிலாகத் தங்களுக்குப் புகழும் பெருமையும் தேடிக்கொள்ள விரும்புகின்றனர்.

இப்படியொரு கேலிக்கூத்தை வேறெங்காவது காணமுடியுமா?

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

அனி:- இல்லை! எதைப்பற்றியானாலும் சரி; எப்படியானாலும் கேட்கலாம்.

சாக்ர:- அன்பரே! நாநிலத்தில் நடமாடும் நாநாவித உயிர்களுக்கும், விந்தைமிகு மனிதருக்கும் வேறுபாடு என்ன என்பதற்கு விடை தரமுடியுமா?

அனி:- பூ! இவ்வளவுதானா? மற்றவை அனைத்தும் ஐயறிவும், அதற்குக்குறைந்த அறிவும் படைத்தவைகள்! மனிதன் மட்டும் ஆறறிவு படைத்தவன்.

சாக்ர:- அந்த ஆறாவது அறிவு எது?

அனி:- எது என்பதற்கு இங்கே இடமில்லை. பெரியோர்கள் சொல்லிவைத்தது; அவ்வளவுதான்! அவர்களே 'எது' என்று சொல்லாமல் போய்விட்டார்கள்! நாம் அதைப்பற்றி ஆராய்வது பெரிதும் பாபம்! சாஸ்திர விரோதம்!

சாக்ர:- அவ்வளவு விளக்கம்தேவையில்லை! 'எனக்குத் தெரியாது' என்று ஒரே வார்த்தையில் கூறிவிடுங்களேன்!

அனி:- ஆ! எனக்கா தெரியாது! நான் ஏதென்ஸ்லேயே பெரிய கவிஞன்! தெரியுமா? பைத்யமே! எனக்கா தெரியாது என்று சொன்னாய்! எனக்குத் தெரியாத விஷயங்கள் உலகத்தில் எதுவுமே கிடையாது!

சாக்ர:- உங்களுக்குப்புரியாத-உங்களால் புரிந்துக்கொள்ள முடியாத எத்தனையோ உண்மைப் பொருள்கள் மறைந்து கிடக்கின்றன. அவைகளைக் காண நீங்கள் எத்தனித்ததுண்டா? அதுதான் உங்களால் முடியாதே!

அனி:- ஏன் முடியாது?

சாக்ர:- உங்களைப் பெற்றவர்கள் பிள்ளைப் பருவத்தில் மடிமீது இட்டுக் கொஞ்சி மகிழ்ந்தகாலத்தில் சிந்தனையை ஊட்டாத காரணத்தால்தான் உங்களால் முடியாது என்கிறேன்.

அனி:- என்னை வளர்த்தபோது பார்த்தவன்போலப் பேசுகிறான் பேதை! அனைவரையும் வளர்த்ததுபோலத்தான் என்னையும் வளர்த்தார்கள். வளர்ப்பால் மல்லிகை கள்ளியாவதுண்டா?

சாக்ர:- மனிதர் என்றால் அனைவரும் மனிதர்கள்தான்! ஆனால் சிந்தனைத் தெளிவால் மனிதன் வேறுபடுகிறான்; மல்லிகைஎன்றால் அது மல்லிக்கொடியிலேதான் பூக்கும். ஆனால், மாடியினுள் சட்டியிலே மல்லிகைச் செடியைவைத்து குடம் குடமாய்ப் பன்னீரை ஊற்றினாலும் பலன் மிஞ்சாது என்கிறேன் நான். மலரைத் தந்தாலும், மணம் மிஞ்சாது, கொஞ்சமிருக்கும் மணமும் சிறிது நேரத்தில் மாறிப்போய்விடும், ஆனால், அதே மல்லிகைச்செடி தோட்டத்திலே வளர்ந்தால் பலனும் மிஞ்சும், மணமும் கொஞ்சும்! இதன் காரணம் என்ன நண்பரே?

அனி:- (விழிக்கிறான்)

மற்றவர்:- டோய்! என்னடா ஐயாவே விழிக்கிறாரு? இதுவரைக்கும் அளந்ததெல்லாம் வெத்து வேட்டுத்தானா?

*[அந்நேரம் அமைதியாக நின்றிருந்த லைக்கோன் முன்வந்து]*

லைக்:- அட, சீ! மூடுடா வாயை! அதற்கான காரணத்தைத் இந்த ஆண்டிப்பயலேதான் கூறட்டுமே!

சாக்ர:- மனிதனுக்கு மனிதன் மதிப்புக்கொடுக்கும் நிலையை மறந்து மடைத்தனமாகப் பிதற்றுகின்ற பித்தர்களுக்குப் பாவலன், நாவலன் என்று பட்டம் கொடுத்தது யார்?

லைக்:- மரியாதையாகப்பேசு, நடப்பது விபரீதமாக இருக்கும்!

அனி:- (அந்நேரம்) ஆ...! (என்று கைகளை நீட்டுகிறான்)

சாக்ர:- மரியாதையைக் கட்டிக் காத்து அதற்கு ஒரு பொருள் கொடுப்பது யார்! என்றுசிந்திக்க வேண்டுகிறேன்.

லைக்:- எதையோ எடுத்தான்! அதற்கு விளக்கம் தரமுடியவில்லை; அளக்கிறான் அர்த்தமில்லாமல்!

( 13-ம் பக்கம் பார்க்க )

காஞ்சீபுரம்

5-3-'61.

# தம்பி !

பக்கத்தில் இருப்பது யார்? உனை ஈன்ற அன்னையா? பாதத்தை முத்தமிடு! தந்தையோ? தாளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்! அண்ணனோ? அகமும் முகமும் மலர, அண்ணா! என்று தழதழத்த குரலில் அழைத்து மகிழ்ந்திடு. தம்பியானால், முதுகைத் தட்டிக்கொடுத்திடு, களிப்புடன். பெற்ற மகவானால், உச்சிமோந்து முத்தமிடு! உன்னை அந்தப் பெருமைக்குரிய நிலைக்குக் கொண்டுவந்த பெருமாட்டியெனில், பேசவும் வேண்டாம், களிநடமிடும் கண்கள் போதும், வெற்றிக்கவிதை பாடிட! ஆம்,

தம்பி! , ஆமாம்! மகிழ்ச்சிப் பெருக்கெடுக்கும் நிலையில் உள்ளோம். உருண்டு திரண்டு கருத்துப் பெருத்து வரும் கருமேகம், ஊரழிக்கும் பேய் மழையாகும் என்று, பெரியவர்கள் பீதியுடன் தலை அசைக்க, தொலைவிலிருந்த வண்ணம், இதோ படை எடுத்து வருகிறேன், பெருமரங்களை வேரோடு சாய்ப்பேன், பயிர் பச்சைகளை அடியோடுஅழிப்பேன், கூரைகள் பிய்த்தெறியப்படும், கொடுமை நடமிடப்போகிறது, காணீர்! என்று கூறுவதுபோலப் பேய்க்காற்று முன்னறிவிப்பாக, மண்ணை வாரி இறைக்கிறது என்று பலரும் பயந்தவண்ணம் கூறிடத்தக்கதோர் நிலைமை, திடீரென மாறிக், கப்பிக்கிடந்த காரிருள் விலகி, இரைச்சலைக் காற்று நிறுத்திக்கொண்டு, வெளிர் விட்ட வானம் தெரிந்தால், பூங்காற்றும் வீசினால், எங்ஙனம் இருக்கும்! அந்நிலை கண்டோம், நிலை யாது ஆகுமோ என்று திகைத்துக் கிடந்த நாம். கருவுற்ற தாய்க்கு, குழவி ஒரு பாரமல்ல; இயக்கத்துக்குப் புதிய நிலை ஏற்படுவதற்கான கருத்துகள் குவிவதும், ஒரு தொல்லையல்ல. ஆனால், சேயினை ஈன்ற தாய், அதனைச் சீராட்டிப் பாலூட்டி வளர்த்திடும் பக்குவம் கெடாதபடி உடல்நிலை இருக்கவேண்டும்—புதிய கருத்துகளைப் பெறுவதனால், இயக்கத்தின் கட்டுக்கோப்பு அழிந்துபடக்கூடாதன்றோ! எத்துணை எழில் இக்குழவி! ஆனால், இதனை ஈன்றிட்டபோதுதான், தாய் மாண்டாள், என்று கூறிட வேண்டிய நிலையைவிடக் கொடுமையானது வேறு உண்டோ? அஃதேபோல, அருமையான கருத்து, ஆயினும், இதனைக் குறித்து எழுந்த விவாதம் கலாமாகி, கழகம் கலகலத்துப் போய்விட்டது என்று கூறும் நிலை ஏற்படுமானால், அதனைவிட நெஞ்சை வேகவைக்கும் நிலையும் வேறு உளதோ!

தளராது உழைத்திடும் தம்பி! தன்னலமறுப்புடன், தாய்த்திருநாட்டுக்கான திருப்பணிக்காக உன்னையே ஒப்படைத்துவிட்ட பொன்னனை, தம்பி! நமது கழகத்திலே புகுந்து குடைந்த நெருக்கடி நிலைமை, தம்பி சம்பத்தின் உண்ணாநோன்பு எனும் கட்டம்

## வெற்றிக்கவிதை பாடிடுவாய்!

சென்ற உடன், உண்மையை உன்னிடம் மறைப்பானேன், நான் என்னென்னவோ எண்ணிக்கொண்டேன், பித்தம் பிடித்தவன்போல். ஏறுநடையுடையோனே! உன்னையும் மனக்கண்ணால் கண்டேன்—குறும்புப்பார்வையுடன் நின்றிடும் காங்கிரசாரையும் கண்டேன். நமது கழகக் கூட்டங்களுக்காக, வந்து சேர்ந்திடும் அணிவகுப்பும் தெரிந்தது; மண்டலக் காங்கிரசில் கூடி, இடிஇடியெனச் சிரித்தபடி, தொலைந்ததுகள் பீடைகள்! என்று பேசிய கும்பலும் தெரிந்தது. குழந்தையைப் பெருமையுடன், பரிவுடன் ஏந்திவரும் தாய்போல, எங்களுக்குச் சூட்டிட, மாலைகளை வாங்கிக்கொண்டு, அவைகளிலே உள்ள இதழ் ஒன்றுகூடச் சிந்தாமல் சிதறாமல் இருக்கவேண்டும் என்ற அக்கரையுடன் அன்புடன், நீ, எடுத்துவரும் காட்சியும் தெரிந்தது; காங்கிரஸ் கூட்டங்களுக்குச் செல்பவர்கள், ஒருவருக்கொருவர் குதூகலமாகப் பேசிக்கொண்டு குதியாட்டம் போட்டதும் தெரிந்தது. வாலிபர்கள் வயோதிகர் போலாகினர், சோகம் கப்பியதால்; வயோதிகர் வாலிபர்போன்றாகி வாய்விட்டுக் கதறினர். இஃது ஒன்றுதான், வடநாட்டு எதேச்சாதிகாரத்தை வீழ்த்த வல்ல படைக்கலனாக உளது; அரிய வேலைப்பாடும் கூர்மையும் கொண்டதாக இருக்கிறது; இதனால், மக்கள், விடுதலைப்போரினை வெற்றிகரமாக நடாத்திடும் ஆற்றலைப் பெறப்போகிறார்கள்—பெற்று வருகிறார்கள், என்ற ஆர்வமிகு எண்ணம், நாட்டிலே நிலைத்துவிட்டது. அமைச்சர்களின் அரவணைப்பினால் அகமகிழ்ந்தோர், ஆதாயம் பெற்றோர், நிலையினை உயர்த்திக்கொண்டோர், என்போரைக் காணும்போதெல்லாம், நமது கழகத் தோழர்கள், கடுகடுத்த பார்வையைக்கூட விட்டுவிட்டனர்—கனிவுகூடக் காட்ட ஆரம்பித்தனர் — உமக்கும் சேர்த்துத்தான், நாங்கள் கேட்கும் விடுதலை—திருஇடம் விடுபடின், உமக்கும் நத்திப் பிழைக்கவேண்டிய நிலை இராது, என்று எடுத்துக் கூறுவதுபோல, நம்பிக்கை யூட்டுவதுபோலப் பார்த்தனர், பேசினர். இந்த நெருக்கடி வந்துற்றபோதோ, காங்கிரசாரை மட்டுமல்ல, நம்மவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடக் கூச்சம் ஏற்பட்டுவிட்டது. பார்த்திடின் பேசவேண்டிவரும்—பேசிடின் உள்ள வேதனை அதிகப்படும், புதிய கிலி கொள்ளத்தக்க 'சேதி' ஏதேனும் கேள்விப்பட நேரிடலாம்—எனவே, பார்க்கவும் வேண்டாம், பேசவும் வேண்டாம், என்றே எண்ணிக்கொண்டனர். நாலு தலைமுறையாக நம்முடைய குடும்பத்திடம் இருக்கும் மாடிவீடு, அங்கு மகிழ்ச்சி தரும் மணவிழாக்கள் நடந்திருக்கின்றன, மனம் உருக்கும் வேறு நிகழ்ச்சிகளுந்தான்; அந்தக் கூடத்திலே, ஊர்ப் பெரியவர்கள் உட்கார்ந்து உரையாடி மகிழ்ந்தனர்; இசை கேட்டு இன்புற்றனர்—இவன்தான் என் மகன்! என்று கூறிட, பெயர்? என்று பெரியவர் கேட்டிட, நான் நடக்கும் நடை காட்டவில்லையோ என் பெயரை என்று கூறுவதுபோலச் சிறுவன், அரசனென நடந்துகாட்டியதும் அந்தக் கூடத்திலேதான்; ஆருயிர்அனையாள் முல்லையும் மல்லியும் சூட்டிக்கொண்டு, சரிபார்த்துக்கொண்டதும், அந்தக் கூடத்திலே உள்ள நிலைக்கண்ணாடி முன்தான்; சூட்டியதைச் செல்வன் பிய்த்தெறிந்து வீசிவிட்டுக், கலகலவெனச் சிரித்திட, எவரும் எளிதிலே செய்திட இயலாத வீரச் செயலைத் தன் மகவு செய்துவிட்டதுபோல எண்ணி, அவன் கன்னத்தை முத்தமிட்டுக் கருப்பஞ்சாறு பருகிய தாய் உலவியதும் அந்தக் கூடத்திலேதான்; பல் முளைத்துவிட்டது என்று பாலகனை வாயைத் திறக்கச்சொல்லிக் காட்டி மகிழ்ந்ததும்

சிரித்திடக்கண்டு சிரித்ததும் அங்குதான் — அப்படிப்பட்ட இல்லம், நாளைக் காலையிலே, கடன் கொடுத்தவன் கரம் தரப்பட இருக்கிறது, அதற்கான அலுவலருடன் வரப்போகிறான், விடிந்ததும், என்று முன்னாள் இரவு கேள்விப்பட்ட, வீட்டுக்குடையவர்கள், அங்கு எப்படிப்பட்ட, உள்ளத்துடன் இருப்பார்கள் — தம்பி! நமது கழகத்திலே பேரிடி விழவேண்டும் என்று எண்ணிக் கிடந்தவர்கள், நம்மை அந்த நிலைக்கு ஒப்பிட்டு உள்ளம் பூரித்துக் கிடந்தனர். திருவொற்றியூரில் நாம் கூடித், தேன் பருகி மகிழ்கிறோம்—அதே நாளில், அதேபோது, அவ்விதம் நடைபெற வழி ஏற்படாது என்ற எண்ணத்தில், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில், கழகம் ஒழிந்துவிட்டது! நமக்குச் சிரமம் கொடுக்காமல், அவர்களே ஒருவரை ஒருவர் அடித்து அழித்துக்கொண்டனர். எவனுக்குக் கண் போயிற்றோ,எவனுக்குக் கால் உடைந்ததோ, யாருக்குக் கத்திக்குத்தோ,எல்லாம் பொழுது விடிந்தால், தெரிந்துவிடும்! — என்று வெறி அளவுக்கு மகிழ்ச்சிகொண்டவர்கள் — தம்பி! தலைவர்களேதான்!! — பேசினராம், சிரித்தனராம், கைகொட்டினராம், கண் சிமிட்டினராம் — ஏகப்பட்ட அமர்க்களமாம்!! ஏனிருக்காது, தம்பி! கள்ளிக்காட்டிலே தாய்ந்த வயிறோடு கிடக்கும் கழுகுக்குப், பிணநாற்றம் கிளம்புவது தெரியவேண்டியதுதானே தாமதம், தன் பெருஞ் சிறகுகளை விரித்து, அடித்துக்கொண்டு, பறந்து வந்துவிடுகிறதல்லவா? காங்கிரஸ் வட்டாரத்தினர் அவ்வளவு எதிர்பார்த்தார்கள். இருக்குமல்லவா, அவர்களுக்கு எரிச்சல். அக்குத்தொக்கு அற்றவர்கள், வக்கு வழி இல்லாதார், சொக்கவைக்கும் பார்வையோ, விலை கொடுத்து ஆள் வாங்கப் பணமோ இல்லாதவர்கள். ஏடு ஏது இவர்தம் சொல்லைச், செயலை நாடு அறியச் செய்ய; ஊர் வளைக்கும் வழி அறியார், பேர்பெற்ற குடும்பத்தினருமல்ல; அன்னக்காவடிகள்; இதுகளால் ஆவது என்ன? என்று எண்ணிக், கெக்கலி செய்தனர் காங்கிரசார், கழகம் துவக்கியபோது. ஆனால், அவர்களே கண்டு மலைக்கத்தக்க மாபெரும் வடிவம் கொண்டது கழகம்; அதன் வண்ணம் மற்றவர்க்குப் பாடம் தரவல்லதாயிற்று; கழகப் பேச்சு, கழக எழுத்து, கழகப் பாடல், கழக நாடகம் என்று, கழகம் என்ற சொல்லே 'அடைமொழி' என்றாகிவிட்டது. எங்ஙனம் தாங்கிக் கொள்ள முடியும், காங்கிரசாரால்! எள்ளி நகையாடிப் பார்த்தனர், பேச்சுக் கச்சேரியால் என்ன ஆகும் என்று! பிறகு, பேசத்தெரிந்தவர் நீவிர்மட்டுமோ? என்றுகூறிக் கிளம்பினர் பேச! நாடகம் நடத்தினர், மாநாடு கூட்டினர், பாடகர்களைத் துணைக்கு அழைத்தனர், பலப்பலவும் செய்துபார்த்து அலுத்துப் போயினர். பிறகோ? நமது கழகத்தில், கசப்புக் காரணமாகவோ, காரணமற்ற பூசலின் விளைவாகவோ, எவரேனும் வெளியேறினால், கொக்கெனக் காத்திருந்து கொத்திக்கொண்டு போகலாயினர்.

தம்பி! கழகத்தான் என்பதுமட்டுமல்ல, சிறப்புக்குரியதாக இருப்பது; கழகத்தில் முன்பு இருந்தவர் என்ற பேச்சே, சிறப்புக்குரியதாக்கப்பட்டது; மக்களை ஈர்க்கப்பயன்பட்டது. அதாவது, தம்பி! நம்மை மறுத்துப்பேசக்கூட, நமது'பாணி'ப்பேச்சே தேவைப்பட்டது. அவ்விதம், நமது கழகம், பின்பற்றத்தக்க, வழி முறைகளை ஆக்கித் தரத்தக்க, மாமன்றமாயிற்று. இவ்வளவும் காணும் காங்கிரசாருக்கு, எப்போது, நாம் வீழ்ந்துபடுவோம் என்ற எண்ணம்தானே எப்போதும், மனதிலே இருந்தபடி இருக்கும். இயற்கைதானே! எனவேதான், நமது கழகத்திலே, பேச்சுப், பெருங்கூச்சலாகாதா,

லவா, முக்கியம். மாந்தோப்பாக இருந்தாலென்ன, புளியந்தோப்பாக இருந்தாலென்ன, காலாகாலத்திலே காய்த்து, காய்த்தது நல்லவிலேக்கு விற்றுக் காசுகிடைத்து, வாழ்க்கையைச் செம்மைப்படுத்தினுல் போதும் என்றுதானே எவரும் எண்ணுவார்கள். கூடைக்காரன், மண்வெட்டியும் கையுமாகத்திரிந்து, மடைதிருத்திக் கிராமத்திலே இருந்தபோது, கிடைத்த வாழ்க்கை நிம்மதியைக் காட்டிலும், பட்டணத்திலே பிழைக்கவந்ததால், சிறப்பான வாழ்க்கையா, கிடைத்தது? அதுதானே இல்லே! இடம் மாறினுன், இடர் மாறவில்லேயே! தொழிலே மாற்றிக்கொண்டான், தொல்லே குறையக்காணேம்!

கைராட்டை காவேரிக்கு இது நன்ருகப்புரிகிறது; புரிவதால் அமைச்சர், இதைப்போய், வளர்ச்சியின் அறிகுறி என்கிருரே, எவ்வளவு......! என்று எண்ணுகிருன்; என்ன கடினமான வார்த்தை பொருத்தமாக இருக்குமென்று எண்ணிப் பார்த்துப் பார்த்து, மனதிற்குள்ளாகவே குமுறிக்கொள்கிருன்.

*

"அண்ணு! அதெல்லாம் இருக்கட்டும். இதை எல்லாம் உனக்கு யார் சொன்னது!" என்றுதானே, தம்பி, கேட்கத்தோன்றுகிறது. உனக்கு அந்த ஐயப்பாடு ஏற்படும்என்று எனக்குத்தெரியும். இருவருமேதான் சொன்ஞர்கள்.

*

"என்ன செய்தாலும், இந்த ஜனங்களுக்குத் திருப்தியே ஏற்படுவதில்லே. குறைகூறிக்கொண்டிருப்பதே வேலே. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கக் கூடாதா. வெள்ளேக்காரன் காலத்திலே, இங்கே, ஏற்பட்டுவிட்ட கேடுபாடுகளேப்போக்க, இழிவுகளேத் துடைக்க, பஞ்சத்தை நீக்க, எவ்வளவோ கஷ்டப்பட்டு வேலே செய்துகொண்டிருக்கிருர்கள். உடனே தீர்ந்து விடக்கூடிய காரியமா இது. என்னய்யா, சுயராஜ்யம்! சுகம் எங்கே? என்றுதானே கேட்கவேண்டியிருக்கிறது, என்று பேசுகிருர்களே, கொஞ்சம்கூடப் பொறுப்பு இல்லாமல்"—என்று கைராட்டை காவேரி, சிறிதளவு கோபத்தோடு, பேசிக்கொண்டிருந்தான், என் நண்பன் 'நவபாரதி'யிடம். தம்பி! நவபாரதியை உனக்கு அறிமுகப்படுத்தவில்லேயே. 'நவபாரதி' என்பது, பெற்ருேர் இட்ட பெயரல்ல; அவர்கள் பாபம், அதெல்லாம் தெரியாதவர்கள், இராமா கிருஷ்ணு கோவிந்தா, என்று காலந்தள்ளி வந்தவர்கள்; எனவே அவர்கள் நரசிம்மன் என்றுதான் பெயரிட்டார்கள்; ஆனுல், நரசிம்மன், காவேரி போலவே, காங்கிரஸ் தொண்டாற்றக் கிளம்பி, 'நவபாரதி' என்று பெயரெடுத்துக்கொண்டான். காகிதம் கிடைத்தாலும், நல்ல சுவர் கிடைத்தாலும், காங்கிரசைப்பற்றி எதையாவது எழுதுவான், அடியில், இப்படிக்கு 'நவபாரதி' என்று கையெழுத்து இருக்கும்.

பீகார் பூகம்பம் ஏற்படக் காரணம் என்ன?

பிரிட்டிஷ் ஆட்சியால் பூமாதேவி குலுங்கிக் குலுங்கி அழுதாள்! அதுதான் காரணம்!!

இப்படிக்கு
நவபாரதி.

தம்பி! இப்படி எதையாவது எழுதியபடி இருப்பான். போலீசார் வெள்ளே அடித்து மறைப்பார்கள்; இவன் வேறு இடத்தில் எழுதுவான்; பிறகு இதிலே படிப்படியாக முன்னேறிக் கையெழுத்துப் பத்திரிகை நடத்தி, பிறகு அச்சிட்டு வழங்கி, பிறகு அச்சகமே வைத்து, பிறகு அது பறிமுதலாகி, பிறகு அதற்காகப் பொதுமக்கள் நிதி திரட்டிக் கொடுத்து, பிறகு அதை வைத்துப் பெரிய அளவில் பத்திரிகை நடத்தி, இப்போது, சர்க்காரின் சாதனேகளேத் தெரிவிக்கும், வெளியீடுகளே, அச்சிட்டுப் புகழ் (பொருள்) ஈட்டி வாழ்ந்து வருகிருர், நவபாரதி. அவரிடம் பேசும்போது, காவேரிக்கு, ஆர்வமும், துணிவும் இயற்கையாகவே அதிகமாகத்தானே ஏற்படும். தனக்குத் தகுந்த பக்கபலம் கிடைத்தது என்ற எண்ணத்தில், பேசலானுன். மேலும், நான் இருக்கிறேனல்லவா — என்னேக்குத்திக் கிளறி வேடிக்கை பார்க்கலாம் என்ற நோக்கம் வேறு. நான், அன்று அங்கு இல்லாவிட்டால், நவபாரதி, வேறுவிதமாகக், காவேரியுடன் கூடிக்கொண்டு பேசியிருப்பானே என்னவோ, நான் இருந்துவிட்டதால், நவபாரதி காவேரியுடன், வாதாடவேண்டித்தான் ஏற்பட்டுவிட்டது; ஏனெனில் நவபாரதி, என்னிடம் பலமுறை சுயராஜ்ய ஆட்சி சரியாக நடைபெறவில்லே என்று ஒப்புக்கொண்டு பேசியவன்!!

"காவேரி! மக்கள் குறை கூறுவது இருக்கட்டும். நம்முடைய காங்கிரஸ் ஆட்சியை மற்றவர்கள், அதிலும் அண்ணுதுரை போன்றவர்கள், குறைகூறிப் பேசும்போது, காங்கிரசுக்காகப் பாடுபட்ட நமக்குக் கோபம் வரத்தான் செய்யும். ஆனுல், நமக்கே, உள்ளபடி, காங்கிரஸ் ஆட்சியில், திருப்தி ஏற்பட்டிருக்கிறதா? நாம், எதிர்பார்த்தபடி, திட்டமிட்டபடி, மக்களிடம் வாக்குறுதி அளித்தபடியாகவா, ஆட்சி நடக்கிறது?" என்று நவபாரதி கேட்டான். அவன் பேச்சு, அழுத்தந்திருத்தமாக இருந்தது. தம்பி! எனக்குத் தூக்கிவாரிப்போட்டது; ஏனெனில், நவபாரதியின் புதிய வெளியீட்டில், காங்கிரஸ் ஆட்சியின் சாதனேகளே அவ்வளவு அதிகமாகப் பாராட்டிக் கதிரவன் ஒளி காணுதார், கானம் கேட்டு இன்புருதார், காங்கிரஸ் ஆட்சியின் சாதனேயை உணராதார், மூவரும், ஒரு தாய்வயிற்றுப் பிள்ளேகள்! தாயல்ல அவள் — பேய் பெரும்பேய்! பிரிட்டிஷார் விட்டுச்சென்ற பேய்!!—என்று நவபாரதி எழுதியிருந்தான்.

அவன்தான் காவேரியைக் கேட்கிருன், பார்த்தபடியாகவா காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது என்று; என் எதிரில்!

காவேரிக்குக் கடுங்கோபம்; "நவபாரதி! குறைபட்டுக்கொள்வது, யாருக்கும் எளிது. ஆசை இருக்கும். அடுத்த விநாடியே அம்பாரிபோட்ட யானைமீது, அமர்ந்து பவனிவரவேண்டும், பக்கத்திலே ஒரு இராஜகுமாரி உட்காரவேண்டும், அவள் கூந்தலில், பாரிஜாத

மலரைச்செருகி மகிழவேண்டும், என்றெல்லாம். உடனே முடிகிற காரியமா! தோட்டமே கைக்குவந்து கொஞ்சக்காலம்தானே ஆகிறது. திருத்தி, பாத்திகட்டி, பயிரிட்டு, செடிமுளைத்து...செ! இதுகூடத்தெரியாமல், அரசமரத்தைச் சுற்றிக்கொண்டே, அடிவயிற்றைத் தடவிப்பார்க்கிற கதைபோலச், சுயராஜ்யம் வந்து என்ன பலன்? ஒன்றும் காணோமே! என்று மூக்கால் அழுவதா?''—என்று படபடத்துப் பேசினான், காவேரி. நவபாரதி, சில விநாடிகள் ஒன்றும் பதில் பேசவில்லை. ஒருவேளை, தனது அடுத்த வெளியீட்டுக்கு, காவேரியின் அந்தப் பேச்சை முன்னுரையாக்குவதா, முடிவுரையாக்குவதா என்று யோசனைசெய்து கொண்டிருந்தானோ, என்னவோ!

ஒன்றுகூற மறந்துவிட்டேனே, நாங்கள் மூவரும் வேறு ஒரு காரியமாகக், கிராமம் சென்றிருந்தோம். அங்குதான் இந்த உரையாடல்.

நவபாரதி பதிலேதும் பேசாததால், காவேரிக்குத் துணிவு அதிகமாகிவிட்டது, பிரிட்டிஷார் செய்துவிட்டுப்போன நாசம் கொஞ்ச நஞ்சமா? அந்த நாசத்தால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் நாட்டைத் திருத்தி, நல்ல நிலைமையை ஏற்படுத்துவது எளிதான காரியமா? விரைவிலே முடிந்துவிடக்கூடிய காரியமா? வேரோடு கீழே சாய்ந்துவிட்ட பெருமரம் நம் கைபட்ட உடனே பூத்துக் காய்த்து, கனி குலுங்கவேண்டுமென்று சொல்வது போலல்லவா இருக்கிறது இவர்கள் கூற்று!'' என்று காவேரி பேசினான்.

“நண்பருக்கு நான் ஒரு விஷயம் கவனப்படுத்தலாமா?'' என்று நான் கேட்டேன். “ஒன்று என்ன! ஓராயிரம் சொல்லலாம்! என்ன சொல்லப்போகிறீர்கள் என்பது தெரியாதா எங்களுக்கு'' என்று சற்றுக் காரமாகவே கூறினான் காவேரி.

தாராளமாகப் பேசலாம் என்று கூறினதால், நான், சற்று விரிவாகவே, விளக்கமளிக்கலானேன். “தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் வேலை, பாலைவனத்தைச் சோலைவனம் ஆக்குவதுபோன்ற மிகமிகக் கடுமையான வேலை என்று மக்கள் எண்ணி ஏமாற [illegible]டும் என்று காங்கிரஸ் ஆட்சியினர் கருது[illegible]ள்—பேசுகிறார்கள்.'' “புயலாலே பூந்தோட்டம் [illegible]து; கிணற்றிலேயோ இடி விழுந்து தூர்ந்து [illegible]விட்டது. ஆறு, ஆறுவது கல்லில் இருக்கிறது, அங்கிருந்து வாய்க்கால் வெட்டிக்கொண்டு வருவதற்கோ, இடையில் ஒரு சிறு குன்று கிடக்கிறது, நான் அந்தக் குன்றைக் குடைந்து வாய்க்கால் அமைக்கலாமா; அதைச் சுற்றி வளைத்துக்கொண்டு வாய்க்கால் கொண்டு வருவதா என்பதுபற்றி, நிபுணர்களைக் கேட்போமா அல்லது “நின்று தவமிருந்தாள்,'' கோயில் பூஜாரியிடம் யோசனை கேட்போமா என்று சிந்தித்த வண்ணம் இருக்கிறேன், சிரமப்படுகிறேன், நீயோ மல்லிகைப்பூ மாலை எங்கே, மருக்கொழுந்துக் கட்டு எங்கே, மனோரஞ்சித மலர் எங்கே? என்று கேட்டுத் தொல்லை தருகிறாயே என்று பேசும் தோரணையில், காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தைவிட்டு வெள்ளைக்காரன் நீங்கியபோது, பிணம் புதைக்கக் குழி வெட்டும் வேலையிலிருந்து இவர்கள் துவக்கவேண்டி வந்ததுபோலவும், அதற்குள் மக்கள் ஏதோ வீணாக அவசரப்பட்டு, ஆத்திரப்படுவதுபோலவும் கருதிக்கொண்டு, குறைபட்டுக்கொள்கிறார்கள்.

வெள்ளைக்காரன் இந்தியாவைச் சுரண்டினான்—மறுப்பாரில்லை; செல்வத்தைக் கொள்ளை கொண்டான்—மறைப்பாரில்லை; ஆனால், அவன் விட்டுச் சென்ற இந்தியா பாலை வனமுமல்ல—படுகுழி நிரம்பி, கள்ளிகாளான் பூத்துக்கிடக்கும் கடுவெளியுமல்ல என்பதை மக்கள் அறிவார்கள்.

பெரும்போரிலே சிக்கிக், கொடுமைக்கும் குண்டு வீச்சுக்கும் இலக்காகி, எழில்மிகு நகரங்கள் மண்மேடுகளாயின; வளம்மிகு வயல்களெல்லாம் பிணக்காடுகளாயின; தொழிற்சாலைகளெல்லாம் குப்பை மேடுகளாயின; கடலே இரத்த மயமாயிற்று! குடும்பங்கள் இலட்சக் கணக்கிலே சிதறின! வாழ்வு சிதைந்தது! வீடிழந்து நாடிழந்து, எதிரியிடம் சிக்கிச் சீரழிந்துபோன மக்கள் ஆயிரமாயிரம்! நடுநிசியில் விமானம் வரும்; நாசக் குண்டுகளை வீசும்; கட்டிலும் தொட்டிலுமே புதை குழியாகும்; கன்னல் மொழிக் குழவி கண்ணெதிரே கூழாகும்; மனம் குழம்பித் தாய் மடிவாள்; தகப்பனோ, மரமாகி நிற்பான், மனத்துயரால்!

கட்டிடங்கள் இடியும் சத்தமும், குண்டுகள் சீறிடும் சத்தமும், குலை நடுங்கி மக்கள் கூச்சலிடும் சத்தமும், நித்தியநாதமாக இருந்தது. தலைநகர்களைவிட்டுச் சர்க்கார் ஓட்டமெடுப்பதும், உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக் குழியில் இறங்கிக் குடும்பம் நடாத்துவதும், சர்வ சாதாரணமான சம்பவமாக இருந்தது.

நாமெல்லாம் மாண்டுபோனாலும், நாம் பெற்றெடுத்த செல்வங்கள், பிள்ளைக்கனி அமுதங்கள், இந்தப் பேசும் பொற்சித்திரங்கள் பிழைத்தால் போதும்; குண்டு வீச்சும், பிண நாற்றமும் பிடித்தாட்டும் இந்த நாட்டிலே, இந்த மொட்டுகள் இருந்து கருக வேண்டாம்; கண்காணாச் சீமை சென்றேனும் கண்மணிகள் வாழட்டும்; காலமும் நிலைமையும் மீண்டும் ஒன்று சேர்த்து வைத்தால் உச்சிமோந்து முத்தமிடுவோம்; அன்றி, இங்கேயே மடிய நேரிட்டாலும், நமது 'குலக்கொடி' அழிந்துபடவில்லை — எங்கோ ஓரிடத்தில்,

போரும் புகையும், சச்சரவும் சாவும் தீண்டாத ஓர் திருநாட்டிலே, நமது உயிரோவியங்கள் வாழ்கின்றன—என்று மனத்திருப்தியுடன் மண்ணில் புதைபடுவோம்; மாணிக்கங்கள் தப்பினுல் போதும்; இன்பப் பெருக்கு கள் இந்தத் துன்ப பூமியிலிருந்து வேறிடம் சென்ருல் போதும்—என்று எண்ணித், தலைவாரிப்பூமுடித்துக்,கன்னத்தைத் துடைத்து முத்தமிட்டு, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ‘கண்ணே சென்றுவா! மணியே போய்வா! என் உயிரே. உன்னைப் பிரிகிறேன்! கர்த்தன் அருளால் மீண்டும் சேருவோம்!’—என்று தழதழத்த குரலில் கூறி, ஆயிரக்கணக்கான குழந்தைகளை, பிரிட்டனிலிருந்து, கனடாவுக்குக் கப்பலேற்றி அனுப்பி வைத்தனர்.

இவ்விதமான இடுக்கண்களும், பொருள் இழப்பும், உயிர் இழப்பும், கேட்போர் உள்ளத்தை உருக்கும் விதமான அளவிலும், வகையிலும் நடைபெற்று, நாடுபல நாசமாயின போரின் காரணமாக!

அன்று அலர்ந்த மலரைக் கண்டு திங்கள் பலவாயினவாம் ஒரு வீரனுக்கு—களத்திலே கடும்போரிலே அவன் நெடுங்காலமாக ஈடுபட்டிருந்த காரணத்தால்! ஓர் நாள் களத்திலே சிறிது ஓய்வு கிடைத்ததாம்; அது போது அவன், களத்தை விட்டுச் சிறிதுதூரம் சென்று, அழிவுக்கு மத்தியிலே, எப்படியோ தப்பிப் பிழைத்த ஒரு மலரைக் கண்டு, மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து, அதைப் பறிக்கச் சென்ருனும்! வேவு பார்த்துக்கொண்டிருந்த எதிரிப்படையினன் ஒருவன், மலர் பறிக்கும் போது, அவனைச் சுட்டுக் கொல்ல, கரத்தில் மலரும், மார்பில் இரத்தமுமாக அந்த வீரன் இறந்துபட்டானும்!

கண்ணீர் கன்னத்தில் புரண்டோடச் செய்யும் காதைகள் பலப்பல, களம் தந்தது.

அத்தகைய கடும்போரிலே, சிக்கிச் சீரழிந்த நாடுகளெல்லாம், மீண்டும் வாழ்வு பெற்றுவிட்டன; அங்கெல்லாம் ஆளவந்த நாயகர்கள், எவ்வளவு அரும்பாடு பட்டிருந்தால், எத்துணைத் திறமையுடன் திட்டம் தீட்டி வெற்றி பெற்றிருந்தால், இவ்வளவு அழிவுக்குப் பிறகு அங்கு மக்களுக்கு வாழ்வு கிடைத்திருக்க இயலும் என்பதை எண்ணிப்பார்த்தால் போதும்—இங்கு ஏதோ மலையைக் குடைபிடித்து, மங்கையைக்காத்திடும் போக்கிலே பணிபுரிவதாகப் பேசும் காங்கிரஸ் ஆளவந்தாரின் திறமை வெட்டவெளிச்சமாகிவிடும்.

போர் நம்மைத் தீண்டவில்லை—நினைவில் இருக்கட்டும்! களம், இங்கு இல்லை—கவனமிருக்கட்டும்! நாசக் குண்டுகள், நமது நகர்களைப் பதம் பார்க்கவில்லை; எல்லாவற்றையும் சினிமாப் படத்திலேதான் பார்க்கிருேம்; இதழ்கள் மூலம் ‘சேதி’ தெரிகிறது.

அணுகுண்டு விழுந்த ஜப்பானும், பிணமலை குவிந்த ஜெர்மனியும், இரத்த ஆறு ஓடிய ரஷியாவும், இடிபாடுமயமான இங்கிலாந்தும், சீரழிந்த வேறு பல சிறு நாடுகளும், புயலுக்குப் பிறகு புள்ளினங்கள் கிளம்பிப் பண் இசைத்து, புதுக் கூடு கட்டிக்கொண்டு, பெடையுடனும் குஞ்சுகளுடனும் குதூகலமாக வாழ்வதுபோல, மீண்டும் வாழ்வின் ஒளியைப் பெற்றுவிட்டன!

போரே தீண்டாத இப்பொன்னுடு, ஓர் புனித ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது; மற்ற எந்த நாட்டுத் தலைவர்களுக்கும் கிட்டாத மதிப்பும் செல்வாக்கும், இங்கு காங்கிரஸ் தலைவர்களுக்குக் கிடைத்தது.

போரிலே பெரும் பணியாற்றி, அழிய இருந்த பிரிட்டனைக் காப்பாற்றி, ஹிட்லரை முறியடித்த பெருமைக்கு உரியவராக இருப்பினும், சர்ச்சிலை, வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளிவிடும் துணிவு, பிரிட்டிஷ் ஜனநாயகத்துக்கு இருந்தது.

இங்கோ, கல்லை நிறுத்தினுலும், கட்டையைக் காட்டினுலும் காங்கிரஸ் என்ருல் தட்டாமல் தயங்காமல், ‘ஓட்’ அளிக்கவேண்டும் என்றனர் தலைவர்கள்; ஆஹா! என்றனர்மக்கள். ஒரு நாட்டுமக்கள் இதைவிட விளக்கமாகக், கட்சிப்பற்றையும் தலைவர்களிடம் ‘பக்தி’யையும் காட்டியிருக்கமுடியாது.

இவ்வளவுக்குப் பிறகு, எதிர்ப்போர் எவரும் இன்றி, அழைத்த இடம் வருவதற்கு ஒருநாட்டு மக்கள் தயாராக இருந்த நிலையில், எதைச் சாதிக்க முடிந்தது? ஏன் வறுமையைத் துடைக்கமுடியவில்லை? ஏன் மக்களின் வாட்டத்தைப்போக்க முடியவில்லை?

தேசபக்தரே! தேசோத்தாரசுரே! தேசபந்துவே! தீனபந்துவே! ஜோதியே! சுடரே! முத்தே! மணியே! வாழவைப்போம் என்று வாக்களித்த பெம்மானே! வாழ்வளிக்கும் திட்டம் எங்கே? சீரளிக்கும் சட்டம் எங்கே? என்று மக்கள் கேட்டால் சீறுகிருர்களே, நியாயமா?'' என்று நான் கேட்டேன்.

“இது தெரியும் இவர்களுக்கு, ‘வளவள’வெ[illegible] பேச, காமராஜர்கூட, இதைச் சென்ற கிழமை கன[illegible]துப் பேசினுர்'' என்ருர் காவேரி.

“ஆமாம்! மக்கள் நியாயம் கேட்டால், [illegible] வென்று பேசுவதுபோலத்தானய்யா, தோ[illegible] எதேச்சாதிகாரிகளின் போக்கு. ‘மளம[illegible] காமராஜரால் பேசமுடியும் — பேசவேண்டிய[illegible] வளவுதான், அவருக்கு! காங்கிரஸ் நல்லகட்சி, மற்[illegible] தெல்லாம் மோசம். எங்களால்தான் ஆளமுடியும். மத்தது பிரயோஜனம் இல்லை. நன்மைகள் செய்கிருேம். அதற்காகத்தான் வரிபோடுகிருேம். வரி அதிகம் கொடுத்தால் நன்மை அதிகம் செய்வோம்.''

இவ்வளவுதான், அவர் சரக்கு! இதைக் காட்டி விட்டுக், கோணியைச் சுருட்டிக்கொண்டு அடுத்த ஊர் போய்க் கடைபரப்புவார். நாங்கள் அப்படி அல்லவே! ஆதியோடு அந்தமாக, விளக்கமாக, மனதில் பதிகிற படி பேசவேண்டும். அது உங்களுக்கு வளவளவென்று தான் தோன்றும்'' என்று நான்சொன்னேன். நவபாரதி குறுக்கிட்டு, "பிரிட்டிஷ் ஆட்சிக்குப்பிறகு, இந்தியா எந்த நிலைமையில் இருந்தது என்பதுபற்றிக் காவேரி சொல்வதுதவரு?'' என்று கேட்டார். "அதைக் கேட்ட தற்குத்தான், ஒரு கதாகாலட்சேபமே செய்துவிட் டாரே!'' என்று கேலி செய்தான் காவேரி. "திட்டவட்ட மாகப் பேசவேண்டும்'' என்ருன் நவபாரதி. "புள்ளிவிவ ரப்படி'' என்று திருத்தமளித்தான் காவேரி. "புள்ளிவிவ ரம் கேட்கிறீர்களே — எந்தப் புள்ளிவிவரம்? உங்கள் சர்க்கார் தருகிறபுள்ளிவிவரம்போலவா!'' என்று, எனக் குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, "உங்கள் சர்க்கார்தருகிற புள்ளிவிவரம் மகாமட்டம் என்று, திட்டக்கமிஷன் உறுப்பினர், சீமன்நாரா யணனே, கண்டித்திருக்கிருரே, தெரியுமா!! ஆனுல், நான் அப்படிப்பட்ட புள்ளிவிவரம் தரப்போவதில்லே. எல்லோரும் ஒப்புக்கொள்கிறதை மட்டுமே சொல் கிறேன்; வெள்ளேக்காரன் இந்த நாட்டைவிட்டு வெளி யேறுகிறபோது, தங்கமாகவும் ரொக்கமாகவும் நம் முடையது என்று இருந்த தொகை 1,179,74,00,000 ரூபாய் என்றுகணக்கிட்டிருக்கிருர்கள். பதினுன்காண்டு ஆட்சி நடத்தி இருக்கிறீர்கள்—இப்போது நிலேமை என்ன தெரியுமல்லவா? **4971**-கோடி ரூபாய் கடன் பட்டிருக்கிறோம். 1959-60-ல், கடனுக்காகச் செலுத்தும் வட் டித் தொகை 129-கோடி ரூபாய். 1960-61-ல், வட்டித் தொகை 143-கோடி ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிருர் கள். இதைக்கூடக் காவேரி மறுக்கமுடியுமா?'' என்று கேட்டேன். நவபாரதி சிறிதளவு குறும்புத்தனமான பார்வையைக் காவேரியின் பக்கம் செலுத்தியபடி, "கடன்பளுவு அதிகம்தான்! மிகமிக அதிகம்! அதனுல், வட்டி கட்டித்தீரவேண்டிய தொல்லே ஏற்படுவது மட்டு மல்ல, பணப்பெருக்கம் ஏற்பட்டு, விலேவாசி ஒரேயடி யாக ஏறி, மக்கள் மெத்தக் கஷ்டப்படுகிருர்கள்'' என்று கூறினுர். "கடன் வாங்காமல் முன்னேற்றம் நடக்குமா?'' என்று, நம்பிக்கையுடன் கேட்டான் காவேரி. "எந்த முன்னேற்றத்தைக் குறிப்பிடுகிருர் நண்பர்! சித்தரஞ்சனு, சிந்திரியா?'' என்று நான்கேட்க, வபாரதி, "சிந்திரியைக் குறிப்பிடமாட்டார், அதிலும் போது!! காவேரி! அண்ணுத்துரை நம்முடையகட்சி ல்; அதனுல் அவன் குத்திக்காட்டும்போது, நமக் காபம் வரத்தான் செய்யும்; ஆனுல், கோபம் உண் க் காணமுடியாத அளவுக்கு நம்முடைய கண் றக்கக்கூடாதல்லவா? எவ்வளவு வரிச்சுமை, , இவைகளேத் தாங்கிக்கொண்டு, மக்கள் அவ ருர்கள். அவர்களிடம்சுரண்டிச், சிந்திரிபோன்ற ரியதிட்டத்தை நடத்துகிருர்கள். அங்கு, இப்படிப் பட்ட அக்ரமம், கண்மூடித்தனமான நிர்வாகம் நடக்க லாமா? ஏன், அடுத்த தலேமுறைகூடக் கட்டித்தீர வேண்டிய அளவுக்குக் கடன் வாங்குகிறீர்கள் என்று யாராவது கேட்கும்போது, மார்தட்டிச் சொல்கிறோம், கடன் வாங்கிக் கடலிலா கரைக்கிறோம், கட்டித்தங்கம் வாங்கி நகைசெய்வதுபோல, விதைபோட்டுச் செடி வளர்ப்பதுபோல, இந்தப் பணத்தைப்போட்டு, நாட்டுக்குப் புதுச் செல்வம் தரக்கூடிய திட்டங்களேப் போடுகிறோம், அமைப்புகளே ஏற்படுத்துகிறோம், தொழில்களே அமைக்கிறோம் என்று பேசுகிறோம். பேசி விட்டுச் சிந்திரியைக் காட்டுகிறோம். அங்கு நடை பெற்ற அக்ரமத்தை எப்படி மூடி மறைக்கமுடியும்! எப்படிச் சகித்துக்கொள்வது? நீயேதான் சொல்லேன்'' என்று நவபாரதி கேட்டான். காவேரிக்குக் கோபத்தை விடத் துக்கம்தான் அதிகம் என்பது தெரிந்தது. நான் என்னசெய்வேன் நிர்வாக ஊழலுக்கு என்று, பொறுப் பைத் தட்டிக்கழிக்க விரும்புபவன் அல்ல காவேரி! எங் கள் கட்சி! எங்கள் சர்க்கார்! என்று மகிழ்ச்சியுடன், பெருமையுடன், சில வேளேகளில், ஆணவத்துடன் கூடப்பேசும் போக்கினன். பாவம்! பற்று இருக்கத் தானேசெய்யும்!! உரிமையும் இருக்கத்தானே இருக் கிறது! மந்திரி மாணிக்கவேலருக்கு, என் கட்சி! என் சர்க்கார்! என்று கூறிக்கொள்ளும், துடிப்பும், பற்றும், உரிமையும், நிலேமையும், இருக்கிறபோது, காவேரிக்கு இருக்கக்கூடாதா அந்த உரிமை. கைராட்டை காவேரி யாயிற்றே! மாணிக்கவேலர், சைகிள் பெட்டியாயிற்றே! காவேரி காந்திபக்தர். மாணிக்கவேலர் பூந்திதந்தவர் என்று பேசிக்கொள்கிருர்கள்!!

"பெரிய நிர்வாகத்திலே, சிறு சிறு தவறுகள் ஏற் பட்டுவிடுவதுதான். இதைப்போய்ப் பெரிதுபடுத்த லாமா?'' என்று சொல்லிப் பார்த்தான், காவேரி. "ஒன்ரு, இரண்டா, பல்லேக் கடித்துக்கொண்டு பொறுத் துக்கொள்ள. அடுக்கடுக்காக வெளி வந்தபடி இருக் கிறது, ஊழல், விரயம், நிர்வாகக் கோளாறு. சிந்திரி விஷயம் சாதாரணமானதா! உணவு உற்பத்தி பெருக்கு வதுதான் திட்டத்தின் உயிர்நாடி என்கிறோம். உணவு உற்பத்தி பெருக, உரம் தேவை என்கிறோம் அந்த உரத் தொழில் நடக்கும் இடம் சிந்திரி. அங்கு மோச மான நிலேமை இருக்கவிடலாமா!! குழந்தைக்காக, பால் காய்ச்சி வைத்திருந்தேன், பாழாய்ப்போன பூனே உருட்டிவிட்டது என்று மனேவி சொன்னுல், சமாதானம் வருவதில்லேயே, நம் மனதுக்கு. இது அப்படிக்கூட அல்லவே! பாலேப் பூனே குடித்துவிட்டது; என்ன செய்வது? இது தெரியாமல், குழந்தை அழுகிறதே, கொஞ்சம்கூடப் புத்தியில்லாமல் என்று கூறிக்கொண்டே, குழந்தையை முதுகில் அறைந்துவிட்டு, அது வீறிட்டு அழ ஆரம்பித்ததும், பாலேக் குடித்த பூனே 'மியாவ்' 'மியாவ்' என்று கத்து வதைக் காட்டி, பாப்பா! அழாதே! அதோ, கேள், பூனே பாடுகிறது! அதைக் கேட்டுக்கொண்டே தூங்கு! கண்ணல்ல, தூங்கம்மா, தூங்கு!!—என்று தாய் பேசினுல் எப்படி இருக் கும்? அப்படி இருக்கிறது ஒவ்வொரு ஊழலேப்பற்றியும் சர்க்காரை நடத்துகிறவர்கள் சமாதானம் சொல்லும் போக்கு.''

இவ்வளவும், சர்க்காரின் சாதனேகளேக் குறித்து, வெளியீடுகளே அச்சிட்டு வழங்கும், நவபாரதம், பேசு கிருர். தம்பி! எனக்கு வேலேயே, இருக்காது போலிருந் தது.

காங்கிரசுக்கு அப்போது வயது இருபத்துஐந்தாண்டு; வெள்ளிவிழாக் கொண்டாட வேண்டியவேளை; ஆனால், கொண்டாடப்பட்டதோ, வேறு விழாவாகிவிட்டது.

மராட்டிய மண்டலத்துக் காங்கிரசுக்கும், வங்கக் காங்கிரசாருக்கும்,மனமாச்சரியம் மூண்டுவிட்டிருந்தது.

காங்கிரஸ் மகாநாடு—அகில இந்திய மகாநாடு—நடைபெற ஏற்பாடாயிற்று. நாகபுரியில் நடத்தலாம் என்றனர் ஒரு சாரார்; கூடாது, சூரத்தில் நடத்தலாம் என்றனர், மற்றொரு பிரிவினர். இடத்தைக் குறித்த சண்டை முதலிலேயே தொடங்கிவிட்டது. கடைசியில், சூரத்தில் நடத்துவது என்று முடிவாயிற்று. வரவேற்புக்குழுவினர், வங்கத்தைச் சேர்ந்த ராஷ்பிகாரிகோஷ் தலைமைவகிக்கத் தேர்ந்தெடுத்தனர். மிகத் தகுதிவாய்ந்தவர், அறிவாளி, எழுச்சிமிக்க சொற்பொழிவாளர், ராஷ்பிகாரிகோஷ். எனினும் அவர்வேண்டாம், திலகர் தலைமை வகிக்கட்டும் என்று ஒரு பிரிவினர் வாதாடினர்.

"வரவேற்புக் கமிட்டியின் முடிவுக்கு, எதிர்ப்புத் தெரிவிக்கலாமா? முறையாகுமா?"

"பெரிய முறையைக் கண்டுவிட்டார்கள்! வாயைப் பொத்திக்கொண்டு இருங்களய்யா! பொல்லாத வரவேற்புக்கமிட்டி கூட்டிவிட்டார்கள். உங்கள் கமிட்டியை யார் மதிக்கிறார்கள்?"

"இது போக்கிரித்தனமான பேச்சு!"

"யாரடா, போக்கிரி! நாக்கை உள்ளே வைத்துப் பேசு—இல்லை—வெட்டி எடுத்துவிடுவோம்..."

"பெரிய சூரப்புலிதான், சும்மாகிடடா..."

"வாடா பார்த்துக்கொள்கிறேன், நீ மாகாநாடு நடத்துவதை."

"என்ன செய்துவிடுவாய்?"

"வந்து பார், தெரிகிறது."

போய்ப் பார்த்தபோதுதான், செருப்புவீசப்பட்டது, தடிகொண்டு தாக்கினார்கள், நாற்காலிகளை உடைத்தார்கள், பெரிய கலகமே நடைபெற்றது.

"சரி! நமக்குள் ஏன் தகராறு, திலகரும் வேண்டாம்; ராஷ்பிகாரியும் வேண்டாம்; லாலா லஜபதிராய் தலைமை வகிக்கட்டும், என்று சிலர் யோசனை கூறினர். லாலா லஜபதிராயின் புகழ் உச்சத்தில் இருந்த நேரம் அது. அவருடைய தலைமையை ஏற்றுக்கொள்வது, தமக்குத் தரக்குறைவு அல்ல, என்று, திலகர் கோஷ்டி தீர்மானித்தது. ஆனால், பாஞ்சால சிங்கம், இருதரப்பிலும் சேர மறுத்துவிடவே, ராஷ்பிகாரிகோஷ் தலைமை ஏற்றார். அவரை வழிமொழிந்து பேசினார், சுரேந்திர பானர்ஜி. அப்போது திலகர், குறுக்கிட்டு, மறுப்புரை பேச விரும்பினார்; தடுத்தனர்; மீறிச்சென்றார்; கூச்சலிட்டனர்; எதிர்க்கூச்சல் கிளம்பிற்று; மாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் பதறினர்; குழப்பம் ஏற்பட்டது; செருப்புப் பறந்தது, தடிகளைச் சுழற்றினர். நாற்காலிகள் உடைந்தன, திக்காலொருவர் ஓடினர்; சூரத் காங்கிரஸ் குழப்பத்தில் முடிந்தது.

கூடியது நாட்டை மீட்கும் திட்டம் தீட்ட! நடைபெற்றது!

இந்திய தேசியக் காங்கிரசின் மூலவர்கள் கூடினர், பிரச்சினைகளை அலச, ஆராய, விவாதிக்க! வார்த்தைகளை வீசிக்கொள்ளவில்லை; காதறுந்ததை வீசினர்!!

இவ்விதம் இருக்கிறது இவர்களின் 'பூர்வோத்திரம்'. இவர்கள், நமது கழகத்தை ஏசுகின்றனர். பூச்சிக்கடியால் விரலில் வீக்கம் கண்டவனை, வாதத்தால் கால் பெருத்தவன் கேலி செய்வதுபோல இருக்கிறதல்லவா, இது.

தம்பி! சூரத் பாணியில் இல்லையே தவிர, காங்கிரசின் நடவடிக்கைகளிலே பலமுறை, குழப்பமும் அமளியும், நடைபெற்றது. இதைக்கூறி, நம்மிடையே நுழைந்த நாசத்தை நான் அனுமதிக்கிறேன் என்று மட்டும் எண்ணாதே! காங்கிரசின், ஒழுங்கு, கட்டுப்பாடு எந்த இலட்சணத்தில் இருந்திருக்கிறது, என்பதைக் காங்கிரசின் புதியவர்கள், அறிந்துகொள்ளட்டும், என்

உத்தரப்பிரதேசத்தில், சம்பூர்ணாநந்தா கோஷ்டிக்கும், குப்தா பிரிவினருக்கும் மூண்ட மோதலினால், இருதரப்பினரும், ஏசிக்கொண்டதன் அளவுதான் கொஞ்சமா? தரம்தான் சிலாக்கியமானதா? உத்தரப்பிரதேசத்தில் உள்ள பத்திரிக்கைகளைப் பார்த்தாலல்லவா, அந்தக் 'கண்றாவி' தெரியும்.

காங்கிரஸ் அமைச்சர்மீது காங்கிரஸ் தலைவர் புகார் தொடுப்பது; மகனுக்கு வேலை தேடிக்கொடுத்தான்; மருமகனுக்குக் காண்ட்ராக்ட் கொடுத்தான் என்ற குற்றச்சாட்டுகள்--கொஞ்சமா?

இதை எண்ணி எண்ணிக் குமுறிக்கிடக்க வேண்டிய இவர்கள், நம்மைப்பார்த்து ஏளனம் செய்வதா?

நடைபெற்றுவிட்டவைகளைக் கண்டிக்கத் தவறக் கூடாது-களைந்தெறியும் உறுதியுடன் கண்டிக்கத்தான் வேண்டும்; ஆனால், அதற்கு, இவர்களா பொறுப்பாளர்! இவர்கள் தூற்றித்திரிவோர்; தூய்மைப்படுத்தவும் உரிமையோ திறமையோ பெற்றவர்களல்ல. எனினும், எருது மீது உள்ள புண் மீது உட்கார்ந்துவிடும் ஈயைப் போல, இவர்கள் ஆகும்போதுதான், எருது தன் வாலால் அடித்து ஈயை விரட்டுவதுபோல, நாமும், இவர்களின் இலட்சணத்தை எடுத்துகாட்டவேண்டி வருகிறது.

ஆனால், தம்பி! இதைக்கண்டு, நமக்குள் ஏற்பட்டது குறித்து நாம் வேதனைப்படத் தேவையில்லை, என்று எண்ணிவிடக்கூடாது.

நாம் எண்ணிப்பார்க்கவேண்டியது, இதுதான். இத்தனை காலமாகக், கட்டிக் காப்பாற்றி வந்த, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இப்போது தளரக் காரணம் என்ன என்பதும், மீண்டும், மாண்புபெற நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டிய முறைகள் யாவை என்பதும்தான். திருவொற்றியூரில், நாம், அதற்கான முறை வகுத்துக்கொண்டிருக்கிறோம்--தக்க பலன் கிடைக்கும் என்றும் நம்புகிறேன்.

தம்பி! உன் உரையாடலிலும், மற்றவர் சொற்பொழிவிலும், எழுத்திலும் செயலிலும், கடைப்பிடிக்க வேண்டியவைகள், நிரம்ப உள்ளன.

கசப்புணர்ச்சி ஏற்படக் காரணம், கண்மூடித்தனமான போக்கும், பேச்சும். எதையும் கிளறிக் கிளறிப் பேசுவதும், எதற்கும் உள் அர்த்தங்கள் கற்பித்துக்கொள்வதும், இடையிலுள்ளோர் கூறுவனவற்றுக்குச் செவி சாய்ப்பதும்தான் தீதான மனப்போக்கை மூட்டிவிடுகின்றன.

எனவே, பொறுப்புடன் அமைதல் வேண்டும், நம் அனைவருடைய பேச்சும், எழுத்தும், செயலும்.

இதில் எவரேனும் தவறு இழைத்துவிட்டால், உணர்ந்தோர், என்னிடம் கூறுவதும், அவர்களிடமேகூட நேச உணர்வோடு எடுத்துக்கூறித் திருத்த முற்படுவதும் ஏற்புடைய செயலாகும். அதை விடுத்துக், கண்டனம், மறுப்பு, எனும் போக்கிலே ஈடுபட்டுவிட்டால், நோய் பரவுகிறது என்பது பொருள்.

தம்பி! பிளேக் போன்ற மிகப் பயங்கரமான நோய்க்கான கிருமிகளைச், சாதாரண எலிகளல்லவா, பரப்புகின்றன என்கின்றனர், மருத்துவ விற்பன்னர். ஊரையே அழிக்கும்நோய்-அதனைப் பூனை கண்டால் தலைதெறிக்க ஓடும் எலி பரப்புகிறது.

கூட்டாகப் பணியாற்றும் போது, மிகமிகச் சிறு சம்பவங்களைக், கிருமிகளாக்கிப், பரவவிடும்போது நோய் முற்றுகிறது.

எனவே, நம் பேச்சுக்களிலே, பொருளும் பொறுப்பும், காரணமும் தேவையும், தெளிவும் கனிவும் இருக்க வேண்டும்.

"அப்பா காதைத் திருகு! உம்! பார்க்கலாம் உன் சாமர்த்தியத்தை" என்று நாலு வயது மகனுக்குக் கூறும் அதே தாய், இருபது ஆண்டுகளுக்குப்பிறகு, அதே வார்த்தையையே சொல்லிப் பார்க்கட்டும் -- எத்துணை விபரீதமான பொருள்படும்.

தம்பி! நமது கழகம் இன்று அடைந்துள்ள நிலைமை

பொதுவாக, இப்போது மேற்கொள்ளவேண்டியது ஒன்று உண்டு;ஏற்பட்டுத், தீர்க்கப்பட்டுப்போன பிரச்சினைகளைப் பற்றி, உரையாடலிலோ, மேடைப் பேச்சிலோ, பத்திரிகை வாயிலாகவோ, ஆராய்ச்சி நடத்துவது அறவே நிறுத்தப்பட வேண்டும்.

எப்படித் தொடங்கிற்று? ஏன் தொடங்கிற்று? எவர் தொடக்கினர்? என்பனபற்றிப் பேசுவது, புதிய, தேவையற்ற, தீது தரும் விதமான, விளைவுகளைத்தான் உண்டாக்கும். எனவே, பேச்சாளரும் எழுத்தாளரும், தமது நிலையும் நினைப்பும், அறிவும் ஆற்றலும், பண்பும் மாண்பும், நமது கழகத்தை வாழ வைக்க, வளர வைக்கப் பயன்படத்தக்கதாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். பொறுப்புடன் பணியாற்றினால், கழகத்தை வளப்படுத்தலாம்; பொறுப்பினை மறந்தால், பகை புகையும் இடமாக்கிவிட்டுப், பின்னர், கை பிசைந்து கொள்ளும் நிலை ஏற்படும்.

கழகம் துவக்கப்பட்டபோது இருந்த சூழ்நிலை---அதனை எப்படி நாம் மாற்றி அமைத்தோம்.

கழகம் துவக்கப்பட்டபோது, நம்மைப்பற்றி நாடு கொண்டிருந்த எண்ணம், இன்று நாடு காட்டும் அன்பும் ஆதரவும் பெற்றிட எங்ஙனம் முடிந்தது.

கழகத்தின்மீது வீசப்பட்ட அடக்கு முறைகள்; அப்போது அஞ்சா நெஞ்சுடன் நின்ற வீரக் காதைகள்.

கழகத்தின் வளர்ச்சிக்கு அவரவர் தத்தமது அறிவாற்றலை வழங்கிய வகை; அதனால் கழகத்தின் வண்ணமும் வடிவமும் வளர்ந்த விதம்.

கழகம், மொழி காத்திட மேற்கொண்ட முயற்சிகள்; அதுபோது ஏற்பட்ட இன்னல்கள்.

கழகம், கலைத்துறையைப் பக்குவப்படுத்திப், படைக்கலனாகக் கொண்டது, அதனாலாய பயன்.

கழகம், முற்போக்குக் கருத்துக்களை ஆதரித்தது; அதன் விளைவாகப் புதிய தோழமை உணர்வுகொண்டு சமுதாயம் கழகத்தை வரவேற்ற அருமை.

கழகம், விவசாயப் பிரச்சினைப்பற்றிக் கூறிய கருத்துக்கள், ஈடுபட்ட செயல்கள்---நடத்திய கிளர்ச்சிகள்---பெற்ற வெற்றிகள்.

கழகம், தொழிலாளர் துறையிலே கொண்டுள்ள தொடர்பு; ஏற்பட்டுள்ள புதிய அமைப்புக்கள்; அதனால் காணக்கிடக்கும் புதிய நிலைமைகள்; கிடைத்த அனுபவங்கள்.

கழகம், தன் அலுவல்களைச் செய்திடப் பொதுமக்களின் ஆதரவை நாடியது; கிடைத்த அளவும், வகையும்.

கழகம், நெசவாளர் பிரச்சினையில் கொண்டுள்ள தொடர்பு; அதன் பயன்கள்.

கழகத்துக்கு ஏற்பட்ட இருட்டடிப்புகள்---அதனை முறியடிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள்---இன்றைய நிலைமை.

கழகம், மாணவர்களிடம் கொண்டுள்ள பாசம் நிறைந்த தொடர்பு; அதிலே கழகம் மேற்கொண்டுள்ள கண்ணியமான போக்கு.

கழகப் பணியாற்றியவர்கள், மாற்றாரால் படுகொலை செய்யப்பட்ட சோகம் ததும்பும் சம்பவங்கள்---கழகம் அந்தக் குடும்பத்தாருக்கு கைகொடுக்க முன் வந்த நிகழ்ச்சிகள்.

கழகம், மக்களைப் பாதிக்கும், வெள்ளம், பஞ்சம், நோய் போன்ற விபத்துகளின்போது, காட்டிய அக்கரை; திரட்டித் தந்த உதவிகள்.

கழகம், தேர்தலில் ஈடுபடக் காரணம், அதற்கான ஏற்பாடுகள்; பெற்ற வெற்றிகள்; வெற்றிகளின் தன்மைகள்; தோல்விகளுக்கான காரணங்கள்; இப்போது ஏற்பட்டுள்ள நிலைமை மாற்றங்கள்.

கழகம், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நிற்கும் போக்கு; மக்கள் அதனை வரவேற்கும் தன்மை.

கழகம், காங்கிரஸ் முதலாளித்துவ அரசு அமைத்து நடத்துகிறது என்பதை எடுத்துக்காட்டி, மக்களிடம் ஏற்படுத்தியுள்ள தெளிவு.

காங்கிரஸ் ஆட்சியின் வரிக் கொள்கை---தொழில் கொள்கை---அடக்கு முறைப்போக்கு---சட்டங்கள் இயற்றும் போக்கு---பொருள் விரயம்--வீண் காரியம்--நிர்வாக ஊழல், ஆகியவற்றினை, மக்கள் உணரச் செய்ய மேற்கொண்ட முயற்சிகள்.

கழகம், சட்டமன்றம், பாராளுமன்றம், நகராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் ஆகிய இடங்களில் ஆற்றி வரும் நற்பணிகளும்---அவற்றால் ஏற்படும் பலன்களும்.

வடநாட்டு ஆதிக்கம், திராவிடம் படும் தொல்லைகள்.

ஐந்தாண்டுத் திட்டங்கள்--அவைகளில் உள்ள குறைபாடுகள்.

வடக்கு, தெற்கை வஞ்சிக்கிறது என்பது குறித்து, நாம் தவிர, மற்றப் பலரும் எடுத்துக் கூறியுள்ள கருத்துகள்; அவைகளுக்கான விளக்கங்கள்.

வடக்கே அமைந்துள்ள அரசு, தொழில் துறையில் தென்னகத்தைப் புறக்கணிப்பதால் ஏற்பட்டுள்ள கேடுபாடுகள்.

திராவிடத்தின் செல்வங்கள்--அவற்றினைப் பயன்படுத்தாததால், வந்துற்ற சீர் குலைவுகள்.

வெளிநாடுகளில் வேதனை நிரம்பிய வாழ்வு நடாத்தி வரும் தமிழர் பற்றிய விவரம், விளக்கம்; அவர்களுக்கு உள்ள குறைகள்; நீக்குவதற்கான வழி வகைகள்; ஆட்சியாளர் காட்டும் அலட்சியம்.

பொல்லாங்கான ஆட்சி நடத்திடினும், பொது மக்களை வசியப்படுத்த முடியும் என்று காங்கிரஸ் எண்ணிட உள்ள காரணங்கள்--பத்திரிகை பலம், பணபலம், ஜாதியைப் பயன்படுத்தும் போக்கு.

கழகத் தோழர்களின் உடைமைக்கும் உயிருக்கும் கூட ஆபத்து ஏற்படுத்தத்தக்க துணிவு சிலரிடம் ஏற்பட்டிருப்பது; இதிலே துரைத்தனத்தின் கடமை என்ன, என்ற விளக்கம்.

காங்கிரசுக்குப் பக்கபலமாகப், பணம் படைத்தோர் திரண்டு நிற்கும் காட்சி--அதற்கான காரணம்--எதிர்காலம் எப்படி இருக்கவேண்டும், என்பது குறித்த ஆராய்ச்சி.

காங்கிரசை எதிர்த்து நிற்கத் தேவைப்படும் பணவசதி--இதனைத் திரட்டும் முயற்சி--கிடைத்துள்ள பலன்கள்.

அடுத்து வரும் தேர்தலில் கழகத்தோழர்கள் வேலை செய்யவேண்டிய முறைகள்.

தம்பி! மணி, விடியற்காலை நாலு ஆகிறது. கண் தன்னாலேகூட மூடிக்கொள்கிற நிலைமை. ஆனாலும், எனக்கென்னவோ, எல்லாவற்றையும் ஒரே மூச்சில் உன்னிடம் கூறிவிடவேண்டும் என்று ஓர் தணியாத ஆர்வம். உன் ஆர்வம் பழுதுபடாமலிருந்தால்தான், கழகம் மேற்கொள்ளும் எந்த முயற்சியும் வெற்றிபெறும். அந்த நோக்கத்துடன், பணியாற்றினால், பகை எழாது, பண்பு கெடாது, பாங்கான வளர்ச்சி ஏற்படும் -- திருஇடம் அமைக்கும் வழி கிடைக்கும்,

திராவிடத்தின் தன்மை, வளமை, வரலாற்று உண்மை, இன்றைய தாழ்நிலை, இன்பமிகுஎதிர்காலத்தை நோக்கி நாம் நடப்பது.

உலகிலுள்ள சிறிய நாடுகள் குறித்த வரலாறுகள்--விடுதலை வீரர்கள் நடாத்திய, உடம்பைப் புல்லரிக்கச் செய்யும் தீரமிக்க நடவடிக்கைகள்-மக்கள் இதன் காரணமாகப் பெற்றுள்ள எழுச்சி.

இவை குறித்துக், கோடிட்டுக் காட்டிப் பேசவே, நேரம் காணாது; ஆனால், பேசியாகவேண்டும். உன்னாலன்றி, வேறு எவரால் முடியும்? எழு! தம்பி! சோர்வு, திகைப்பு, கலக்கம் விரட்டு! வீர உணர்ச்சிக்கு வேலை செய்! வெற்றி நமதே, அஞ்சற்க.

அண்ணன்,

4-ம் பக்கத் தொடர்ச்சி

சாக்ர:- பொருள் சொல்லத்தான் நடைபோடுகிறேன். ஆனல் அங்கே 'மடைமை' என்ற முள், நடையைத் தடைப்படுத்துகிறது.

அனி:- விதண்டாவாதம் தேவையில்லை! விளக்கம் தேவை?

சாக்ர:- (புன்சிரிப்போடு) விளக்கம்! அது தானே இந்த நாட்டுமக்களிடம் குறைந்திருக்கிறது என்கிறேன் நான். அதை வளர்க்கத் தானே நான் பாடுபடுகிறேன்.

லைக்:- விஷயத்தை மாற்றுகிருன் விஷமக்காரன்! விளக்கம் தர எடுத்துக்கொண்டபொருள், மாடியிலே சட்டியிலே வளரும் மல்லிகைக்கும், தோட்டத்திலே வளரும் மல்லிகைக்கும் வித்தியாசம் .........!

சாக்ர:- ஆம்! மாளிகையில் சட்டியிலே வளரும் மல்லிகை வாட்டத்தைக் கண்டதில்லை; சுடு கதிரும் அதைத்தொட்டதில்லை; நீர் இன்றி வாடியதில்லை; பன்னீருக்குப் பஞ்சமில்லை; சீறிவரும் சூருவளிஅதைத் தாக்கியதில்லை; மழைத்துளிகளோ அதன்மேல் பட்டதில்லை; மாற்ருரின் கொடுமைகளுக்கு அது ஆளானதில்லை; செல்லமாய் சிங்காரமாய் வளர்ந்தது; அதனல் அது பலனும், மணமும் அளிக்க முடியவில்லை.

ஆனல், தோட்டத்து மல்லிகையோ, வாட்டத்தைக் கண்டிருக்கிறது; வாட்டத்தைப் போக்கிக்கொள்ள என்னதேவைஎன்று சாடைக்காட்டிச் சொல்லவும் கற்றுக்கொண்டிருக்கிறது; கார் முகில் நீர் அளித்த உடன் "விரைந்து வந்து என் பொலிவைக் காணீரோ?" என்று புத்தெழிலை அளிக்கிறது; பலவழிகளிலும் தன்னைப் பழக்கிக் கொள்ளுகிறது; காரணமறிந்து கடமையைச் செய்கிறது; சிந்திக்கிறது! சீலத்தோடு வாழ்கிறது; தேடும் பலரோடு தேனெழுகும் மலரைத்தெவிட்டாத மணத்தோடு அளிக்கிறது.

அதுபோலவேகுழந்தைகளையும் அவர்களின் போக்கிலேயே பல சிக்கல்களுக்கிடையில் விட்டு, அதை அவர்கள் சீர்த்தூக்கிப் பார்த்துச் சிந்தித்து முடிவுகாணும் வரை நாம்சற்றுப்பொறுமையைக் காட்டுதல்நல்லது. பொருட்சேதத்தையும் பொருட்படுத்தக்கூடாது. ஒன்றைத் தொட்டு அதன் தன்மையைஅறிய ஆசைப்படுகிருன். அப்போது "தொடாதே" என்ருல் அவன் சிந்தனை அழிந்துவிடுகிறது. நண்பர் சொன்ன ஆருவது அறிவாகிய பகுத்தறிவையும் இழந்துவிடுகிருன். காட்டு மல்லிகையாகாமல், கனவான் வீட்டுத் தொட்டி மல்லிகையாகி விடுகிருன்.

அனி:- பகுத்தறிவுஎன்ருல் பொருள் என்ன தெரியுமா உனக்கு!

சாக்ர:- தெரியாதவைகளைச் சொல்ல மாட்டேன்; தெரிந்துகொள்ள ஆசைப்படுவேன். ஆனல், தெரிந்தவைகளை மட்டும் மறைக்கமாட்டேன்.

லைக்:- திமிர்பிடித்தவன்; கேட்டதை விட்டுவிட்டான்; தன்மதிப்பை அள்ளித் தெளிக்கிருன்!

சாக்ர:- சிந்தனைத் திறனற்று, சீர் தூக்கிப் பாராமல், "சொந்த மண்ணின் சோதரரே! கேளுங்கள் சேதி! உங்கள் பாபங்களுக்கெல்லாம் காரணம் விதிதான்! விதியையும்வென்று,மோட்சலோகத்தைக் காணவேண்டுமானல் எனக்குக் காணிக்கைத் தாருங்கள்!" என்று சதிபுரியும் சனதனத்தை மதியற்ற மக்களுக்கு கூறி மயக்கி வரும் மதவாதியல்ல நான், தன்மதிப்பை வளர்க்க......!

அனி:- (ஆத்திரத்தோடு) ஆ! என்ன சொன்னய்?

சாக்ர:- உலகிலுள்ள எதையும் நிலையாகச் சிந்தித்து, அதைப்பற்றிப் பகுத்துணர்ந்து பிரித்தறியும் அறிவுதான் பகுத்தறிவு என்கிறேன்.

லைக்:- 'அறிவு' என்பது அவனவன் விதிக்கு அடக்கம் என்பதை மறந்து பேசுகிருன்.

சாக்ர:- அப்படியல்ல நண்பரே பொருள்! அறிவுக்குத்தான் அகிலத்திலுள்ள அனைத்தும்அடக்கம். பெற்ருேர்கள் பொய்கைச் சேருக இருந்தாலும், தெளிந்த தண்ணீராகிய சிந்தனையை ஊட்டி வளர்த்தால், அல்லது உண்டு வளர்ந்தால், புவியோர்போற்றும் தாமரை மலர் போன்ற குழந்தைகளைக் காணமுடியும். கடல் அடிச்சேருக இருந்தாலும் முத்தளிக்கும் சிப்பியை வளர்க்க முடிகிறது. எருமைக்குத்தான் சேறு அடக்கம் என்பது எவ்வளவு பைத்தியக் காரத்தனம்?

அனி:- ஆ! விதியைப் பழிக்கிருன்; விதியைப் பழித்தால் ஆண்டவனைப் பழித்ததாகும்!

சாக்ர:- பிள்ளை வளர்ப்பு முறைக்கும், கொள்ளைக்காரரின் விதிக்கும், தெள்ளிய அன்புருவான ஆண்டவனுக்கும் முடிச்சுப்போடுவது முறையல்ல; சம்மந்தமுமல்ல!

லைக்:- சம்மந்தமில்லாமலா பெரியோர்கள் சொல்லிவைத்தார்கள்!

சாக்ர:- "யார் சொல்லி வைத்தது? ஏன் சொன்னர்கள்? எதற்காகச் சொன்னர்கள்? எப்படி விளக்கம் தந்திருக்கிருர்கள்?அப்படிவிளக்கி இருப்பது சரிதானு?" என்று சிந்திக்கும் ஆற்றல்மிக்க அறிவாளிகளை வளர்த்துவிடுங்கள் என்கிறேன்!

அனி:- ஆ! கொடுமை! கொடுமை! நம்முடைய அனுஸ்டானங்களையும், ஆண்டவர்களையும், பழிக்கிருன்!

லைக்:- இவன் பேச்சை யாரும் கேட்காதீர்கள்!

மற்ற:- சரிதானய்யா போவியா! அவர் சொன்னதிலே என்னய்யா தப்பு? அவர் கேக்கிற கேள்விகளுக்குப் பதில்சொல்ல முடியலே! சும்மா உடம்பை அலட்டிக்கிறியே.

மற்ருெ:- அதிலே ஒண்ணுமில்லே, ஆட்டுடா பூசாரி மணியை என்ருனும்!

அனி:- 'உஸ்' என்ருல் ஓடும்பயல்களெல்லாம் இவன் பேச்சைக் கேட்டு நம்மை உதைக்கும் நிலையில் பேசுருனுங்களே!

லைக்:- பெரிய மந்திரக்காரன்போலிருக்கிறது; வா போவோம்! இவனுக்கொரு முடிவுகட்டிவிட்டுத்தான் மறுவேலை.

அனி:- இரு உன்னைப் பார்த்துக் கொள்ளுகிறோம்! (என்று முணங்கிக்கொண்டே இருவரும் சென்று விடுகின்றனர், சாக்ரடீஸ் சிரித்தபடி நின்றுகொண்டிருக்கிருர்)

மற்ற:- ஐயா, அவனுங்க கிடக்கிருனுங்க, மடைப்பசங்க, அவர்களுக்கெல்லாம் நீங்க பயப்படாதிங்க; நீங்க அடிக்கடி இப்படி வந்துட்டுப்போகணும்.

சாக்ர:- அப்படியே வருகிறேன்; உங்கள் அன்பிற்கு என் நன்றி; நான் சென்று வருகிறேன் வணக்கம்.

மக்கள்:- வணக்கம், வணக்கம்.

*[என்று ஆனந்தமாகத் துள்ளி, ஆடிக்கொண்டிருக்கின்றனர். சாக்ரடீஸ் இல்லத்தை நோக்கிச் செல்கிருர்.]*

## காட்சி 3

இடம்:- சாக்ரடீஸ் இல்லம்.

உரியோர்:- சாக்ரடீஸ், சாந்திபே.

*[சாந்திபே உட்கார்ந்து கொண்டிருக்கிருள். சாக்ரடீஸ் ஆடைகளைக் களைந்துகொண்டே]*

சாக்ர:- கேட்டாயா சாந்திபே செய்தியை, குழந்தை வளர்ப்பு முறையைப்பற்றி விளக்கமாகச்சொல்ல வேண்டுமென்ற ஆசையால் பேச வாயெடுத்தேன். அங்கே கொள்ளிக்கண் கோட்டான்களைப் போன்ற இருவர்வந்து "நாவலன், பாவலன் என்று திக்கெட்டும் எங்கள் புகழைப்பாடுகின்றன. எங்களிடமா உன் ஜம்பம்சாயும்! கூறடாபதில், கேளடா கேள்வி" என்று கொக்கரித்தார்கள், கடைசியில் முகத்தைத் தலையிலே ஏற்றிக்கொண்டு நடந்தார்கள். என்ன சாந்திபே பேசவில்லை?

சாந்தி:- உங்களோடு பேச்சு ஒன்று தான் குறைச்சலாக இருக்கிறது? அடுப்பேற்றி அஞ்சுநாளாச்சு, ஆனல்,அரிசியைத்தீட்டிப்போடுடீ என்ருனும் பிழைக்கத்தெரியாத ஒருவன். அதைப்போலச்சாப்பாட்டிற்கு ஒன்றுமில்லை; உங்களின் சாமர்த்தியத்தை எடுத்துக்கூற வந்துவிட்டீர்கள்! உங்களின் அறிவு இப்போது உணவு போடுகின்றதா?

சாக்ர:- இதற்கா இவ்வளவுகோபம்!

சாந்தி:- கோபப்படாமல் கொஞ்ச வேண்டுமாக்கும்.

சாக்ர:- கொடுமை நிறைந்த உலகத்தில் கொள்கைக்காகக்கோரப் பசியில் சிக்கி உயிரிழந்தான் ஒரு ஏழை, என்று குவலயத்து குமுறும் மக்கள் உள்ளங்களிலே கொழுந்துவிட்டுச்சிந்தனைஎழுந்துவிட்டால், அன்றே என் இலட்சியங்கள் நிறைவேறிவிடும். நான் கொடுக்கும் பகுத்தறிவுத்தீனியை என் மக்கள் உண்டால், அதுவே எனக்குப் போதும்.

சாந்தி:- உங்களுக்குப் போதுமானதாக இருக்கலாம்! ஆனல், எங்களுக்கு! பசிபசி என்று கதறும் பச்சிளம் குழந்தைகளுக்கு! அழுதழுது சோர்ந்து மயக்கமுற்று விழுந்துகிடக்கும் நம் செல்வங்களைப் பாருங்கள்!

சாக்ர:- ஆம், பார்க்கிறேன்! அந்நிலைக்காக வருந்துகிறேன். ஆனல்......?

சாந்தி:- என்ன ஆனல்! தான் பெற்றசெல்வங்களுக்குப்பசியாற உணவளிக்க முடியாத உங்களுக்கு வெட்கமாக இல்லை! அறிவு, அறிவு, என்று சொல்லி நம் வருங்காலச் சந்ததியை நமன் கையில் ஒப்படைத்துவிடாதீர்கள் அத்தான்! உங்களின் காலைப் பிடித்துக் கெஞ்சுகிறேன்; பஞ்சத்தில் அடிபடும் பராரிக்குப்பரலோக ஆராய்ச்சி ஏன் அத்தான்! 'அம்மா பசி' என்று அழும் அழுகுரலைக்கேட்டு என் அங்கமெல்லாம் வேகுதத்தான், என்ன செய்வேன்?

சாக்ர:- அழாதே சாந்திபே, அன்புக்கு விதைதூவ நினைக்கிறேன். ஆனல், அன்புச் செல்வங்களின் அலங்கோல அவலநிலையைக் காணுகிறேன். தஞ்சமென்று அடைந்த என்னை நம்பினேர்க்கு 'அஞ்சாதீர்கள்!' என்றுரைக்க என் நா அசையவில்லை. அறம் காக்க அகிலத்து மாந்தர்களை வேண்டுகிறேன்,பகுத்தறிவும், சிந்தனையும் பாரிலே ஓங்குவதற்கு என் ஆவியையும் அர்ப்பணிக்க நான் அஞ்சவில்லை! ஆனல், என் செல்வங்களைப்பற்றித்தான் கவலைப்படுகிறேன். அவர்களின் கோரப் பசிக்கு ஒருபிடி உணவளிக்கமுடியாத நிலையை நினைந்து நான் பெரிதும் வருந்துகிறேன். சே! சே! என்ன உலகமோ?

சாந்தி:- பட்டதெல்லாம் போதுமத்தான்! திட்டத்தை மாற்றிக்கொள்ளுங்கள். நம் வாட்டத்தைத் துடைப்பதற்கு வழிகாணுங்கள்!

சாக்ர:- நேர்மையான நீதிக்கு வித்தூன்றும் இலட்சியத்தை மாற்றிக்கொண்டு, குறுக்குவழியில் செல்வதனல், அறிவிலிகளின் பட்டியலில் முதலிடத்தை அடைந்தவனவேன். ஆனல், அதைவிட அழிந்துவிடுவேன். கொள்கைக்காக உயிர் துறந்தான் ஒரு இலட்சியவாதி என்று உலக மக்கள் கூறினல், அதுவே எனக்கு இன்பம்!

சாந்தி:- எது அத்தான் இன்பம்? ஒருபிடி உணவின்றிப் பசியால் வதைபட்டு வாடித் துவண்டிருக்கும் நம் அருமை வண்ண மலர்களைப் பாருங்கள்! செல்வம் விளையாடும் அழகு மாளிகையில் பிறந்து, கொண்டவன் கொள்கையால் கண்ணீரும் கம்பலையுமாய் வதைபடும் என்னைப் பாருங்கள்! இதுபோதுமத்தான்! இனியும் சோதனைக்கு இடந்தராதீர்கள்! மனம் என்ன கல்லா, அலை புரண்டு மோதினலும் அல்லலைத் தாங்கிக்கொண்டு கரையாமல் இருப்பதற்கு!

சாக்ர:- மனம் என்ற பொன்னைத் துன்பமென்ற உரைகல்லில் உரைத்துப் பார்ப்பவர்கள் உறுதி என்ற உயிர் ஒளியைக் காணுகிருர்கள்.

சாந்தி:- ஒளியல்ல அத்தான்! அழிவென்று சொல்லுங்கள்!!

சாக்ர:- அதுவும் அவனுக்கு வெற்றி தான்!

சாந்தி:- வேதனை என்ற கொடு மிருகம் வாழ்வென்ற பயிரை மேய வந்துவிட்டதத்தான்! சாதனை என்ற வேலி இடுங்கள்! என்கிறேன்!

சாக்ர:- நம்முடைய வேதனையைப் போக்கச் சாதனையைக் கண்டால் மட்டும் போதாது? இந்நாட்டிலுள்ள, நம்மைப்போன்ற இலட்சக்கணக்கான ஏழை மக்களின் வேதனையைப் போக்க வழிதேடி அலைகிறேன், அதற்கான ஒரே ஒரு வழி என் பகுத்தறிவுப் பாசறைதான்.

சாந்தி:- எவ்வளவு உரைத்தாலும் உங்கள் புத்தி அங்கேதான செல்லவேண்டும்? உங்களைவிட்டு நான் என் தாய்வீடு சென்றுவிட்டால் செல்வச் சீமாட்டியாக வாழலாம்! ஆனல், என் தலைவிதி இப்படியுமா ஆகவேண்டும்! அட ஆண்டவனே! என் தலையில் ஏன் இப்படி எழுதினய்!

சாக்ர:- 'அட ஆண்டவனே' ஓ மறந்தேவிட்டேன்! அவனைப்பற்றி என் நாட்டு மக்களுக்குப் பல சொல்லவேண்டும். இருசாந்திபே! இதோ வந்துவிடுகிறேன்!

சாந்தி:- அத்தான்! அத்தான்!! அத்தான்!!

சாக்ர:- (ஓடிக்கொண்டே) இதோ வந்துவிடுகிறேன்!

*[என்று ஓடிவிடுகிருர்]*

# வெள்ளிக்காசு தந்த வெற்றி

—[அரசிளங்கோ]—

கொந்தளிக்கும் பெருங்கடல் அலைகள் அவனுடைய உள்ளக் குமுறலின் ஒலியில் முழக்க மிட, விண்மீன்கள் பூத்துக்குலுங்கும் வெண்ணிற வானத்தைப் பார்த்த படியே அமர்ந்திருந்தான் மணிமுடி.

அந்த வெண்ணிற வானில் வண் ணப்புரு தன் காதலியுடன் உல்லாச மாகப் பறந்துகொண்டிருந்தது. எவனே ஒருவன் வைத்தகுறி ஆண் புருவை வீழ்த்தியது. வண்ணப் புருவோ துடியாய்த் துடித்தது. கடலினுள் பாய்ந்தது.

இக்காட்சியைக்கண்ணுற்ற மணி முடி, கலங்கிய கண்களுடன் வெள் ளிய மணற்பரப்பில் தன் பார்வை யைச் செலுத்தினுன்.

"என் அன்பே! நம் காதல் படகு சரியாகக் கரை சேருமா?" என்ருன். அவன் குரல் சோக வெள்ளத்தில் தோய்க்கப்பட்டிருந்தது.

"மணிமுடி..." என்ருள் மல்லிகா. அவள் குரலில் நடுக்கம் ஏக்கம் எல் லாம் கலந்து இழையோடின. கண் ணீரை முத்து முத்தாகச் சொரிந் தாள்.

"மல்லிகா! நமது கல்லூரி வாழ்க்கை இன்னும் சில தினங் களில் முடிவடையப்போகிறது. பின் னர் நாகரிகத்தின் மணம் வீசாத— சமுதாய மாறுதல் ஏற்படாத—சிறிய கிராமத்திற்குச்செல்லப்போகிருேம்" என்ருன் அவன்.

"உம்......! வேதனை கலந்த பெரு மூச்சொன்று வெளிப்பட்டது. அவ ளிடமிருந்து.

"மல்லிகா! நீயோ பிறப்பில் உயர்ந்த குலம் என எண்ணப்படும் இடத்தில் பிறந்தவள். நானே, பிறப் பில் தாழ்ந்தவன்; தீண்டத்தகாத வன்; தொட்டால் தோஷமெனக் கூறுமளவிற்குச்சமுதாயத்தில் ஒதுக் கப்பட்டவன். நாம் இருவரும் சேர்ந்து வாழ்க்கை நடத்த இந்தச் சமுகம் சம்மதிக்குமா?"

"மணிமுடி! நான் எப்படியும் என் தந்தையின் குணத்தை மாற்ற முயலுகிறேன். ஒரே மகள்—தாயை இழந்த நான் — எதைக்கேட்டாலும் எனது தந்தை மறுக்கமாட்டார். ஆகவே, என் முயற்சி எப்படியும் நல்லவிதமாக முடியும்" என்ருள்.

"இதை இவ்வளவு எளிதென்று எண்ணுகிருயா மல்லிகா? நான் உனது தந்தையைப்பற்றி நன்கறி வேன். பணத்தைவிடக் குலமே பெரிது என்று எண்ணுபவர். வைதி கத்தில்அசைக்கமுடியாதநம்பிக்கை உடையவர். 'ஏழையென்ருல், ஆண் டவனுல் அப்படிப் படைக்கப்பட்ட வன்' என்று எண்ணுபவர். வாழ்வும் —தாழ்வும் ஊழ்வினையால் வருபவை என எண்ணங்கொள்ளும் தன்மை யுடையவர். அவர் நம்விருப்பத்திற்கு இணங்குவார் என்பது, நமது அறி யாமையாகும்."

"அப்படியானுல் நம் காதற் கோட்டை இடையிலே இடிந்து விடுவதா?"

"அப்படி விடக்கூடாது" என்ருன் அவன். மீண்டும் வானத்தை நோக் கினுன். கருமேகங்கள் கலேந்தன.

"மல்லிகா! நம் வாழ்வு மலர்ந்து மணம் வீச ஒரே வழிதான் இருக் கிறது. அது மிகவும் துணிச்சலான காரியம். அதை நிறைவேற்றுவ தற்கு மன உறுதி வேண்டும்" எனக் கூறி அவள் முகத்தை நோக்கினுன்.

"நம் காதல் வாழ்விற்கு எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன், மணிமுடி!"

மல்லிகாவின் உறுதியைக் கண்ட மணிமுடி ஆச்சரியப்பட்டான். அவ ளிடம் தன் எண்ணத்தைத் தெரி வித்தான்.

நாம் இருவரும் கிராமத்திற்குச் செல்லுமுன், இவ்விடத்தில் பதிவுத் திருமணம் செய்துகொள்ளவேண் டும். பின்னர், ஊரில் கூறினுல் காரியம் மிஞ்சிவிட்டது! என்று கூறி விட்டுவிடுவார்கள்."

"சரி... அத்தான்!"

வானத்தில் வெண்ணிலவு பவனி வரத் தொடங்கியது. மணிமுடியும் —மல்லிகாவும் ஆலேயூர் என்னும் அழகான சிற்றூரில் பிறந்தவர்கள்.

தடித்த உருவம்; பெருத்த வயிறு; எதையும் செய்யத் தயங்காத கண் கள்; சுருக்கமாகக் கூறினுல், கொடு மைக்கு இலக்கணம் என்றே கூற லாம். இவர்தான் ஆலேயூர் மிராசு ஆலாலசுந்தரம்-மல்லிகாவை பெற்ற தந்தை. அந்தச் சின்னஞ்சிறு கிரா மத்தில் இவர் வீடு ஒன்றேதான் காரை வீடு. இவர் இட்டதுதான் சட்டம். மாலே நேரத்தில் தனது நிலேங்களேப் பார்ப்பதற்கு ஒற்றை மாட்டு வண்டியில் மயிலேக் காளே யைப்பூட்டி, "கலீர்-கலீர்" என மணி யோசை ஒலிக்கச் செல்லுவார். தெருவிலே செல்லுவோர் எல்லாம் துண்டைஇடுப்பிலேகட்டிக்,கைகளே எடுத்துக் கும்பிடவேண்டும். அந்த அளவிற்குச் செல்வாக்குப் படைத்த வர்.

மணிமுடியோ கிராமத்தின் ஒதுக் குப்புறத்திலுள்ள சேரியில்—நோயை உண்டாக்கும் சாக்கடையில் அகழி அமைந்த மண் குடிசையில் வாழ்ப வன். தந்தையை இழந்த அவன், வயது சென்ற தாயின் அரவணைப் பிலே இருந்தான். அரசினரின் உதவிபெற்றுச்,சென்னேயில் எம். ஏ. படித்தான். அதே வகுப்பு மாணவி தான் மல்லிகா ஊர் மட்டுமல்ல உள்ளமும் ஒன்ருயின.

"மல்லிகா! இவ்வாண்டுடன், உனது படிப்பும் முடிந்துவிட்டது. வயதாகிவிட்டது. உன் திரு மணத்தை விரைவில் நடத்திக் கண் குளிரக் காணவேண்டுமென்பது எனது நெடுநாள் ஆசையம்மா! நமது சுற்றத்திலுள்ள பலர் என் னிடம் பெண் கேட்டு வந்தனர். நீ, உன் விருப்பத்தைத் தெரிவி, விரை வில் திருமணத்தை முடித்துவிடு வோம்.

"அப்பா! எனது மனதிற்குப் பிடித்தவனே மணம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதுதான் என் எண்ணம்"

"அது யார் என்று சொல்லு, மல்லிகா உன் வார்த்தையைத்தட்டு வேனு?"

"அப்பா! அப்பா! அவர்... அவர் நம் ஊரிலுள்ள M. A. மணி..."

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

"என்ன! சேரியில் வாழும் கீழ்ச் சாதிக்காரனையா சொல்லுகிறாய்?"

ஆமாம், அப்பா! சாதி என்பது மனிதனால் தன் சுய நலத்திற்காக உண்டாக்கப்பட்டதுதானே!" பிறப்பாலே ஒருவன் தாழ்ந்தவனாக முடியுமா? அவர் எனக்கு இணையாகப் படித்துள்ளார். மேலும், கல்லூரிலேயே எங்கள் இருவர் உள்ளமும் ஒன்றாகிவிட்டன. பிறப்பால் எல்லாரும் மக்களே."

"என்ன! அவனுக்கு அவ்வளவு திமிரா?" அப்பொழுதே நான் அவனைப் படிக்காமல் தடுத்திருக்கவேண்டும். முளையைக் கிள்ளாததால் முளை மரமாகிவிட்டது. அம்மரத்தைக் கொடி தழுவுகிறது. மல்லிகா! உனக்கு நல்லதைத்தான் கூறுகிறேன். அவனை நீ மறந்துவிடு. நம் கௌரவம் என்ன? அந்தஸ்து என்ன? இருந்திருந்தும் சேரியில் வாழ்பவனையா நீ மணக்கவேண்டும்? எனது மதிப்பு எல்லாம் மண்ணாய் விடும். தகுதியில்லாதவனை நீ மறந்துவிடு. நான் போய் மிட்டாதார் சட்டநாதரிடம் சம்மதம் தெரிவித்து வருகிறேன்!

"அப்பா! போகவேண்டாம்! நாங்கள் ஏற்கனவே சென்னையில் பதிவுத் திருமணம் செய்துகொண்டோம்.

"என்ன! திருமணம் செய்துகொண்டீர்களா? அதையும் பார்க்கிறேன்!"

•

உழைத்த பாட்டாளி விடுகின்ற பெருமூச்சைப் போல, அந்தப் புகை வண்டி மதுரைச் சந்திப்பை அடைந்ததும் மணிமுடியும் மல்லிகாவும் கவலை தோய்ந்த முகத்துடன் இறங்கினர். மதுரை அணிகலன் அங்காடியைக் கடக்கும்பொழுதே மல்லிகாவின் கழுத்துச் சங்கிலி நோட்டாக மாறியது.

இருவரும் அந்த நகரத்தின் ஒரு பகுதியில் சின்னஞ்சிறு வீட்டில் குடியேறினர். மணிமுடிக்கு அந்த நகரத்திலிருந்து வெளிவரும் ஒரு நாளிதழ் அலுவலகத்தில் எழுத்தர் வேலை கிடைத்தது. கிடைத்த ஊதியத்தைக் கொண்டு மனமகிழ்ந்து வாழ்க்கைக் குளத்தில் அந்தச் சோடி அன்னங்கள் சலனமின்றி நீந்தின. ஆனால், சலனமற்ற குளத்தில் கல் வீசப்பட்டது.

ஒருநாள் கணவனை அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டு, உள்ளே வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள் மல்லிகா. கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. ஓடிவந்து திறந்தாள்; திடுக்கிட்டாள். ஆம், தன் தந்தையின் வேலையாள் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். வேலையாள், கண்ணில் நீர் பொங்க, "அம்மா! அப்பா சாகக் கிடக்கிறார். உங்களைப்பிரிந்த ஏக்கம் அவருக்கு இரத்தக் கொதிப்பை ஏற்படுத்திவிட்டது. அவர் தம் தவறை உணர்ந்து வருந்துகிறார். சாகுமுன் உங்களை ஒரு முறையாவது காண வேண்டுமெனத் துடிக்கிறார். ஆகவே, உங்களைக் கையோடு அழைத்துப்போக வந்திருக்கிறேன்" என்று கதறினான். பெண் உள்ளம் இளகியது; பாசம், நடந்ததை மறக்கச் செய்தது. தன் கணவனுக்கு ஒரு மடல் வரைந்து வைத்துவிட்டு உடனே புறப்பட்டுவிட்டாள்.

மல்லிகாவைமனமகிழ்வுடன் வாசலில் நின்று வரவேற்றார் ஆலால சுந்தரம்.

"அப்பா! உங்களுக்கு இரத்தக் கொதிப்பு என்று வேலையாள் சொன்னானே?" என வினவினாள் வியப்பும் அச்சமும் நிறைந்த குரலில் மல்லிகா.

"ஆமாம் அம்மா, எனது இரத்தம் கொதித்துக் கொண்டுதான் இருக்கிறது. நீ முதலில் உள்ளேபோய் உணவு அருந்திக்கொள்."

பெட்டியை வைக்க அறையினுள் சென்ற மல்லிகா திடுக்கிட்டாள். அறையின் கதவுகள் பெருஞ் ஓசையுடன் சாத்தப்படுவதைக் கேட்டுக் கை ஓயும் வரை கதவைத் தட்டினாள். எதிரொலிதான் கேட்டது; கைதான் வலித்தது.

"எசமான்! அவனும் இங்கே வந்துவிட்டான்"

"இங்கேயும் வந்துவிட்டானா? அவன் இருப்பதால்தானே இந்த இடையூறுகளெல்லாம்" என்று கூறி, ஆலால சுந்தரம் வேலையாளின் காதில் ஏதோ சொன்னார். சில வெள்ளி நாணயங்கள் கைமாறின.

மறுநாள் மணிமுடி சேரியில் காணப்படவில்லை.

"மல்லிகா!" என்று வெற்றி முழக்கத்துடன் அலறிக்கொண்டே அறைக் கதவைத் திறந்தார் மிராசுதார் ஆலால சுந்தரம்.

*

"மல்லிகாவும் மணிமுடியும் மறுபடியும் மதுரைக்குப் போய்விட்டார்களாமே" என்று ஒரு குரல் கேட்டுத் திரும்பினார் ஆலால சுந்தரம். வேலையாள் நிற்கக் கண்டார். "எங்கே என் புதல்வி மல்லிகா" என்றார்.

"தாங்கள் கொடுத்த வெள்ளிக் காசுகளை வழிச் செலவுக்குக் கொடுத்து, மல்லிகாவையும் மணிமுடியையும் மதுரைக்கு அனுப்பிவிட்டேன் என்ற நல்ல செய்தியைத் தங்களிடம் கூறவந்தேன்" என்றான் வேலையாள்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.